SPECIAL COLLECTION

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 தை 14 திங்கட்கிழமை (28.01.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 040




# இடைக்கால நிர்வாக சபையை அமைக்க ஜே.வி.பி. ஒருபோதும் இடமளிக்காது

## அதன் தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை மக்களின் தேவைக்காக அமைக்கப்படவில்லை. ஏகாதிபத்தியவாதிகளின் தேவைக்காகவே இனவாத அடிப்படையில் .இந்த சபை அமைக்கப்படவுள்ளது. இடைக்கால நிர்வாக சபையினை அமைக்க ஒருபோதும் இடமளியோம் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுக்கு உதவவில்லை பாதுகாப்புச் செயலர் மறுப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற கருணா பிரிட்டன்செல்வதற்கு போலிப் பாஸ்போட் தயாரித்து கொடுத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

போலிப் பாஸ்போட்டில் பிரிட்டன் சென்ற கருணா லண்டனில் கைது செய்யப்பட்டார். அவருக்கு 9 மாத சிறைத் தண்டனை விதித்து லண்டன் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்புக் கூறியது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற கருணா, இலங்கை ஜனாதிபதியின் சகோதரருக்கு நெருக்கமானவர் என்று பிரிட்டன் அரசு (10 ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையான் குழுவைச் சேர்ந்த இருவர் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறையில் பிள்ளையான் குழுவைச் சேர்ந்த இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் பொத்துவிலில் இத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

ஊரணி கோமாரி வீதியூடாகச் சென்று கொண்டிருந்த இவ்விருவரையும் இனந்தெரியாத ஆயுததாரிகள் சுட்டுக் கொன்றுள்ளனர் என அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (எ-5)

## வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுப்பேன்

### கூட்டமைப்பின் புதிய எம்.பி. உறுதி

(கொழும்பு)

வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீண்டும் அவர்களது சொந்த இடத்தில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ரஜீம் முகமது இமாம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் உறுப்பினராக இருந்த ஈழவேந்தன் பதவியிழந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான ரஜீம் முகமது இமாம் கூட்டமைப்பின் தேசியப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்டுப்பட்டித் தெருவில் 9 பேர் சந்தேகத்தில் கைது

(கொழும்பு)

கொழும்பு ஆட்டுப்பட்டித் தெரு மற்றும் அதனை அண்மித்த இடங்களில் நேற்று இடம்பெற்ற தேடுதலில் 9 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த தவறியதன் காரணமாக கைது செய்யப்பட்டதாகவும் இவர்களிடம் தொடர்ந்தும் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-1)

## மணலாறு, மண்கிண்டிமலையூடான முன்னேற்ற முயற்சி முறியடிப்பு

### விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

மணலாறு மண்கிட்டிமலை, ஜனகபுரப் பகுதிகளின் ஊடாக 4 முனைகளில் படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு படையினர் பலத்த ஆட்லறி மோட்டார்களின் சூட்டாதரவுடன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி முன்னேற்ற முயற்சியை ஆரம்பித்தனர்.

இதற்கு எதிராக (10 ஆம் பக்க்ம் பார்க்க)

## காணாமல் போனோரின் உறவுகள் அநு.வைத்தியசாலைக்குப் படையெடுப்பு

(மன்னார்)

ஹெப்பிட்டிக்கொல்லாவ கிரிபத்கொட பிரதேசத்திலிருந்து 16 சடலங்கள் மீட்கப்பட்டதையடுத்து வடக்கில் அண்மைக்காலமாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் அநுராதபுர வைத்தியசாலைக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை வருகை தந்து சடலங்களை பார்வையிட்டுள்ளனர்.

வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளில் அண்மைக்காலமாக காணாமல் போனவர்களின் உறவினர்களே இவ்வாறு வைத்தியசாலைக்கு நேற்று சென்றுள்ளனர்.

கிரிபத்கொட பகுதியில் மீட்கப்பட்ட சடலங்களில் 8 சடலங்களின் மரண பரிசோதனை நேற்று நிறைவடைந்துள்ளது. எனினும் அந்த சடலங்கள் வைத்தியசாலைக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை வருகை தந்தவர்களினால் அடையாளம் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு கூறும் புலிகளின் உயிரிழப்புத் தொகை குடாநாட்டு மக்கள் தொகையின் இரண்டு மடங்கு

## 'சண்டே ரைம்ஸ்' ஏடு விபரிப்பு



(கொழும்பு)

கடந்த இரு தசாப்தங்களாக இடம்பெற்று வரும் போரில் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக இலங்கை அரசாங்கங்களினால் கூறப்பட்டு வரும் எண்ணிக்கையைக் கணக்கிட்டால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள மொத்த மக்களும் இரு தடைவைக்கு மேல் உயிரிழந்திருக்க வேண்டும் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டின் பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தனது பத்தியில் தெரிவித்துள்ளவற்றின் முக்கிய பகுதிகளின் தமிழாக்கம் வருமாறு,

போரில் உண்மைதான் முதலில் மரணத்தை தழுவுவது உண்டு. கடந்த இரு தசாப்தங்களாக இடம்பெற்று வரும் போரில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகள் தொடர்பாக இலங்கை அரசாங்கங்களினால் கூறப்பட்டு வந்த எண்ணிக்கையை கணக்கிட்டால் யாழ்.குடாநாட்டில் உள்ள மொத்த மக்களும் இரு தடைவைகளுக்குமேல் உயிரிழந்திருக்க வேண்டும். அங்கு யாரும் தற்போது உயிருடன் இருக்க முடியாது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தகவல்களின் பரிமாற்றங்கள் மிகவும் அதிகம். படையினர் களத்தில் மோதல்களில் ஈடுபடும் போது தகவல் திணைக்களமே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்கான தகவல்களை (02 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரித்தானியா சிறையிலுள்ள கருணா மீது தாக்குதல்

## த நேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

போலியான கடவுச்சீட்டுடன் பிரித்தானியாவுக்குச் சென்ற கருணாவுக்கு 9 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் மீது சிறையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான் த நேசன் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

9மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கருணா மீது சிறையில் சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரித்தானியாவில் பாதுகாப்பு அதிகமுள்ள சிறையிலேயே கருணா அடைக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவர் அரசியல் கைதியாகவே வைக்கப்பட்டுள்ளார். அந்த சிறையில் இரு தமிழ்க் கைதிகளும் உள்ளனர். அவர்கள் வேறு குற்றங்களுக்காக அங்கு அடைக்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள தமிழ்க் கைதிகள் கருணா மீது வெந்நீரைக் கொட்டியதுடன் ஆயுதங்கள் கொண்டும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கருணாவுக்கு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனிடையே கருணா தனது சிறைவாசத்தை நிறைவு செய்த பின்னர் அவர் மீது போர்க் குற்றங்கள் சுமத்தப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மனித உரிமை செயற்பாட்டாளர் தெரிவித்துள்ளதாவது,

கருணா தனது சிறைவாசத்தை அங்கு கழித்த பின்னர் அவர் இலங்கைக்கு நாடு கடத்தப்படவேண்டும். ஆனால் அவர் மீதான போர்க்குற்றங்களை பிரித்தானியாவில் விசாரணை செய்யுமாறு அனைத்துலக மன்னிப்புச்சபை, மனித உரிமை கண்காணிப்பகம் ஆகியன பிரித்தானிய அரசுக்கு அழுத்தங்களை கொடுத்து வருகின்றன.

சித்திரவதைகள், சிறார் படையில் சேர்ப்பு, கடத்தல், படுகொலைகள் போன்ற அவர் மீதான போர்க்குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் கருணா மீண்டும் சிறையில் அடைக்கப்படுவார் என அவர் தெரிவித்துள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# பிரேத பரிசோதனை அறிக்கை இன்று நீதிமன்றில் சமர்ப்பிப்பு

ஹெப்பிட்டிக்கொல்லாவ கிரிபத்கொடப் பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இரண்டு புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சடலங்கள் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கை ஹெப்பிட்டிக்கொல்லாவ நீதிவான் நீதிமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சடலங்களை அடையாளம் காண்பதற்காக நேற்று சிலர் வருகை தந்து தகவல் வழங்கியதாகவும் அத் தகவல் பொருந்ததன் காரணமாக சடலங்கள் எவையும் அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

பிரேத பரிசோதனையின் போது இவர்கள் எவ்வாறு மரணமானார்கள் என்பது தொடர்பாக ஆராய்வதற்கு விசேட நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியரின் உதவி பெறப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-2)

# தமிழகப் பொலிஸாரின் கண்காணிப்பில் சந்தனக் கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகள்

## விடுதலைப் புலிகளுக்கு உதவுகின்றனராம்

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு உதவும் குழுவினர் என்ற சந்தேகத்தின்பேரில் சந்தனக் கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகளாக செயற்பட்டவர்கள் மீது புலனாய்வுத்துறை பொலிஸார் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்பட்டது தொடர்பாக அண்மைக் காலங்களில் தமிழகத்தில் பலரை பொலிஸார் கைது செய்து கின்றனர்.

அகதிகள் முகாமிலும் சந்தேகத்துக்குரிய இடங்களிலும் சோதனை தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. இந்நிலையில் விடுதலைப் புலிகளை ஆதரித்து வரும் அரசியல் கட்சிகள் மற்றும் தடை செய்யப்பட்ட சில அமைப்புக்கள் என்பன தற்போது பொலிஸாரின் கண்காணிப்பில் சிக்கியுள்ளன.

சந்தனக் கடத்தல் வீரப்பனுடன் இணைந்து கடந்த 1998 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம், வெள்ளித்திருப்பூர் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு ஆயுதங்கள் கொள்ளையடித்த சம்பவத்திலும் அதைத் தொடர்ந்து கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்திலிலும் பழனியைச் சேர்ந்த முத்துக்குமார் தலைமையிலான தமிழர் மீட்சிப்படை,மாறன் தலைமையிலான தமிழர் விடுதலைப் படை ஆகிய அமைப்புக்கள் முக்கிய பங்கு வகித்தன.

ராஜ்குமார் கடத்தல் சம்பவத்திற்குப் பின் இவ்விரு அமைப்புக்களும் தடை செய்யப்பட்டன.

பல்வேறு வழக்குகளில் கைதாகி பிணையில் விடுதலையாகியுள்ள முத்துக்குமார் அவரது நண்பர்கள் சிலர் வழக்கு விசாரணைக்காக ஈரோடு, சேலம் பகுதிகளுக்கு செல்லும் போது ஒருவரை ஒருவர் சந்தித்து வருவதை உளவுப் பிரிவுப் பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.(ச-5)

# நெதர்லாந்து அரசு அவசர அறிவித்தல்

(கொழும்பு)

இலங்கையில் தற்சமயம் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக நெதர்லாந்து அரசு அவசர அறிவித்தல் விடுத்துள்ளது. இவ்வறிவித்தலை இணையத்தளம் மூலம் விடுத்துள்ளது.

கடைகளிலும் பயணிகள் பேருந்துகளிலும் குண்டுவெடிப்புகள் நிகழ்வதாலும் படையினரின் கண்மூடித்தனமாக தாக்குதல் தொடர்வதால் நாட்டில் எங்கும் பாதுகாப்பற்ற நிலை தொடர்வதால் பயணங்களைத் தவிர்க்குமாறு நெதர்லாந்து அரசு அந்நாட்டு மக்களுக்கு இணையத்தளம் ஊடாக தம் அறிவித்தலை விடுத்துள்ளது. (ச-5)

# தமிழினத்தின் வல்லமை வெளிப்படும் காலம் மிகவும் நெருங்கி வருகிறது

## புதுவை இரத்தினதுரை உரை

(கிளிநொச்சி)

தமிழினத்தின் வல்லமை வெளிப்படும் காலம் மிகவும் வேகமாக நெருங்கி வருவதாக கவிஞர் புதுவை இரத்தினதுரை கட்டியம் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சியில் கூட்டுறவாளரின் மத்தியில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இந்தியப் படைகளின் காலத்திலும்,ஜெயசுக்குறு படை நடவடிக்கையின் போதும் தமிழினம் எழுச்சி கொண்டு வெற்றியீட்டியதை நினைவூட்டியுள்ளார். இந்த வகையில் தமிழினத்தை அழிப்பதற்கு கூஜரத்து நிற்கும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் யுத்தத்தை வெற்றி கொண்டு தமது வல்லமையை தமிழினம் வெளிப்படுத்தும் காலம் நெருங்கி வருவதாகவும் கவிஞர் புதுவை இரத்தினதுரை கட்டியம் கூறியுள்ளார். (ச-5)

---

# அரசு கூறும் புலிகளின் உயிரிழப்புத் தொகை...

வழங்குவதுண்டு.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் தகவல் திணைக்களம் படையினருடன் இணைந்தே செயற்பட்டிருந்தது.

### படையினரின் தகவல்கள்

தற்போது இந்த நிலைமை முற்றிலும் மாறுபட்டது. அதாவது முழு விடயங்களையும் படையினரே கையாண்டு வருகின்றனர். விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் அனைத்துலக பிரசார உத்திகளை அவர்கள் மிகவும் நேர்த்தியாகக் கையாண்டு வருகின்றனர்.

பல வருடங்களாக அவர்கள் அதனை திறமையாகச் செயற்படுத்தி வருகின்றனர். களமுனைகள் தொடர்பான இறுவட்டுக்கள், வர்ணப் படங்கள், புத்தகங்கள் போன்றவற்றை உலக நாடுகளிலுள்ள பல தலைநகரங்களில் அவர்கள் விற்பனை செய்து வருகின்றனர்.

மோதல்கள் தொடர்பான தகவல்களை ஒளிப் படங்களுடன் செய்மதித் தொலைக்காட்சிகள் மூலம் அவர்கள் தெரிவித்து வருகின்றனர். அந்த நாடுகளில் அரசின் இராஜதந்திர மையங்கள் உள்ளபோதும் அவர்களால் இந்தப் பிரசாரங்களை முறியடிக்க முடிபதில்லை.

இதனிடையே இந்தவாரம் மீண்டும் ஒரு பரப்புரை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வான் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தத்தின் போதும் அவர் கொல்லப்பட்டதாகப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம் பெற்ற வான் தாக்குதலில் அவர் காயமடைந் ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் அவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் மருத்துவ சிகிச்சைக்காக அவர் இந்தியா அல்லது டுபாய்க்கு பயணமாகவுள்ளதாகவும் வேறு ஒரு தகவல் தெரிவித்தது.

ஒரு சமயத்தில் ஆசியாவிலுள்ள இலங்கைத் தூதரங்களில் உள்ள் புலனாய்வு அதிகாரிகளை அந்த நகரங்களிலுள்ள மருத்துவமனைகளைக் கண்காணிக்குப்படியும் கோரப்பட்டிருந்தது.

### கொண்டாட்டம்

எனினும் இந்த வாரம் கூறப்பட்டிருந்த கதைகளில் சில தகவல்களும் இணைக்கப்பட்டிருந்தன. அது பெரும் ஆரவாரங்களைத் தெற்கில் ஏற்படுத்தியிருந்தது. சில பகுதிகளில் பட்டாசுகளும் வெடிக்கப்பட்டன. சில வீடுகளில் பால் சோறும் பரிமாறப்பட்டது.

படையினரின் இள மட்ட அதிகாரிகள் மதுச் சாலைகளில் கூடி பாடல்களையும் பாடி மகிழ்ந்திருந்தனர். வெளிநாடுகளிலுள்ள சிங்கள மக்கள் தமது நண்பர்கள் மற்றும் உறவினர்களை அழைத்துத் தகவல்களைத் தெரிவித்தவாறு இருந்தனர்.

தலைவர் பிரபாகரன் அனுமதிக்கப்பட்ட அம்பகாமம் பகுதியிலுள்ள எக்ஸ்ரே தளத்தின் மருத்துவமனைக்கு இந்தியாவிலிருந்து மூன்று மருத்துவர்கள் அழைத்து வரப்பட்டிருந்ததாகவும் ஒரு தகவல் தெரிவித்திருந்தது.

கிளிநொச்சியிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் தமது தொலைத் தொடர்புகள் அனைத்தையும் மூடியதாகவும் கொழும்பில் தகவல்கள் பரவின.

புதன்கிழமை தமிழ்நெற் இணையத்தளமும் செய்திகளை பதிவேற்றம் செய்யவில்லை. இதுவும் சந்தேகங்களை வலுப்படுத்தியிருந்தது.

### பொய்ப்பிரசாரம்

ஆனால் அரசின் பிரசாரம் பொய்யானது என விடுதலைப் புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்திருந்தார்.

வான்படையினர் பொதுமக்களின் குடியிருப்புக்களையே தாக்கியதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார். விடுதலைப் புலிகளின் முன்னாள் காவல்துறைப் பொறுப்பாளரும் தற்போதைய அரசியல் துறைப் பொறுப்பாளருமாகிய பா.நடேசன் வான்படையினர் காடுகளில் தாக்குதல்களை மேற்கொண்டு காட்டு விலங்குகளையே கொன்றனர் எனவும் எத்தனை மான்கள் உயிரிழந்தன என்பது தொடர்பில் தாம் ஆராய்ந்து வருகின்றோம் எனவும் தெரிவித்திருந்தார்.

இது அரசின் பிரசார உத்தி என விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக பணிப்பாளர் சீவரத்தினம் புலித்தேவனும் தெரிவித்திருந்தார்.

கிளிநொச்சியில் கடைகள், பாடசாலைகள் மூடப்பட்டதற்கான காரணம் வேறு. வான்தாக்குதல்களே காரணம் என்றார்.

### தாக்குதல்கள்

புதன்கிழமை காலை கட்டுநாயக்க வான் படைத்தளத்தில் இருந்து 6 தாக்குதல் வானூர்திகள் புறப்பட்டன. அவற்றில் 3 மிக்-27ரக வானூர்திகள். எஸ்.ரி-4பி ரக ஏவுகுண்டுகளையும் கிபீர் வானூர்திகள் ஆயிரம் கிலோ குண்டு ஒன்றை அதன் அடிப்பகுதியிலும், இரு 250 கிலோ குண்டுகளை இறக்கையிலும் சுமந்த சென்றன.

அன்று நடைபெற்ற தாக்குதலானது அதிக வானூர்திகள் பங்கெடுத்த தாக்குதலாகும். அதன் பின்னர் நாளாந்தம் வான் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனிடையே தலைநகரான கொழும்பு மற்றும் ஆழமான தென்னிலங்கையின் பாதுகாப்புக்கள் தொடர்பாக பாதுகாப்பு தரப்பினர் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

மொன்றாகல பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்களை தொடர்ந்தே அவை மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த செவ்வாய்க்கிழமை கெரில்லாக்கள் கித்துள்கோட்டப் பகுதியில் காவல்துறை உப பரிசோதகர் ஒருவரையும், 2 பொலிஸ்உறுப்பினர்களையும் சுட்டுக்கொன்றிருந்தனர்.

அது தனமல்வில மற்றும் குடு ஓயா பகுதிகளுக்கான வீதிகளுக்கிடையில் அமைந்துள்ளது. ஆனால் பொலிஸார் விடுதலைப் புலிகளின் குறிபார்த்துச் சுடும் தாக்குதல்கள் மூலமே கொல்லப்பட்டுள்ளதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஏனெனில் அங்கு மோதல்கள் நடைபெற்றதாக தெரியவில்லை. மறுநாள் காலை புதன்கிழமை தாக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப்பகுதியில் இராணுவ கொமாண்டோக்களும் பொலிஸாரும் தேடுதல்களை மேற்கொண்டிருந்தனர்.

அதன்போது பொலிஸாரின் மோப்ப நாயான பிறவுண் ராஜா ஏதோ ஒன்றை முகர்ந்துவிட்டு நிலத்தில் படுத்துக் கொண்டது. பின்னர் தேடுதல் நடத்திய படையினர் நாயை பின்தொடர்ந்து சென்றபோது அவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 2 கொமாண்டோக்கள் காயமடைந்திருந்தனர்.

அதன் பின்பு 4 மணிநேரத்தின் பின்னர் தேடுதல்கள் கைவிடப்பட்டன.ஏனெனில் விடுதலைப் புலிகளின் துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து பிறவுண் ராஜா தலைதெறிக்க தப்பி ஓடிவிட்டது. 3 மணிநேரத்தின் பின்னரே அது திரும்பி வந்திருந்தது.

தற்போது அந்தப் பகுதிகளில் இராணுவம்,பொலிஸ், ஊர்காவல் படையினர் என 4 ஆயிரம் பேர் தேடுதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தப் பகுதியில் இருந்து பாதுகாப்பு கடமைகளில் இணைந்த 400 பேருக்கு சொட் கண் ரக துப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

### இடம்பெயர்வு

அந்த பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் வரவுகள் மிகவும் குறைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சில கிராமங்களில் உள்ள மக்கள் இரவுகளை கோவில்களில்தான் கழிக்கின்றனர். ஏனையோர் பயிர்ச்செய்கை நிலங்களிற்கும் செல்வதில்லை.

இந்த வாரத்தின் முற்பகுதியில் ஒக்கம்பிட்டியவில் உள்ள சில இல்லங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவர் அங்கு நடைபெற்ற மரணச் சடங்கில் பங்குபற்ற விரும்பிய போதும் பாதுகாப்பு காரணங்களுக்காக பாதுகாப்பு பிரிவினர் அங்கு அவரை அனுமதிக்கவில்லை.

அப்போது சில மக்கள் மகிந்த ராஜபக்ஷவிடம் இந்த போர் எப்போது முடியும் என கேள்வியை எழுப்பியிருந்தனர். இந்தக் கேள்வியானது தற்போதைய தாக்குதல்களின் விளைவுகளை பிரதிபலித்து நிற்கின்றது.

கொழும்பில் தற்போது மேலதிக படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் 60ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

SPECIAL COLLECTION



## இன்று ஒரு தகவல்

# மௌனம்

இந்தக் காலத்துப் பிள்ளை ஒருவன் தன்னுடைய தகப்பனாரைப் பார்த்துச் சொன்னான்–‘‘அப்பா! நான் உங் களுக்கு உதவி செய்யலாமென நினைக்கிறேன்.’’ என்ன உதவி செய்ய வேண்டும் சொல்லுங்கள் ‘‘நீ சும்மா இருந் தால் அதுவே எனக்குச் செய்கிற பெரிய உதவியடா...’’ என்றார் தகப்பனார்.

‘‘சும்மா இருப்பதும் ஒரு உதவிதான். அதுமாதிரி மௌனமும் ஒரு சமூக சேவைதான்’’ என்கிறார் காஞ்சிப் பெரியவர். நமக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐந்து புலன்கள் இருக்கின்றன.

இந்த ஐந்திலும் எதற்கு அதிகப்படியான வேலை என்று நினைக்கிறீர்கள். வாய்க்குத்தான் அதிக வேலை. ஏனென்றால் அதற்கு இரண்டு வேலைகள்.

கண்ணுக்குப் பார்ப்பது மட்டும்தான் வேலை. காதுக்கு கேட்பது மட்டும்தான் வேலை. மூக்குக்கு வாசனையை அறிவது மட்டும்தான் வேலை. உடம்புக்கு உணர்வது மட்டும்தான் வேலை. ஆனால் வாய்க்கு?... சாப்பிடுவதும் அதுதான். பேசுவதும் அது தான்! அதாவது வாய் ஒன்றுதான் கர்மேந்திரியமாகவும் ஞானேந்திரியமாகவும் இருக்கிறது. சாப்பிட உட்கார்ந்தால் எந்தெந்த ஆகாரம் என்னென்ன ருசி என்று அறிவிக்கிற வேலையையும் செய்கிறது.

சபையிலே உட்கார்ந்தால் பாடுவது, பேசுவது, சிரிப்பது போன்ற வேலைகளையும் செய்கிறது. ஆனால் ஒரு வித்தியாசம்! கண், காது, மூக்கு எல்லாம் ஸ்ரெயின் பண்ணிக்கொண்டு வேலை செய்வதில்லை.

ஒரு ரோஜாப்பூ வைப் பார்த்தால் உடனே மூக்கு அப்படியும் இப்படியும் அசைய ஆரம்பிப்பதில்லை. சங்கீதத்தைக் கேட்டால் காது ஆட ஆரம்பிக்காது! ஆனால் வாய் அப்படி அல்ல.

பேசினாலும் சரி, சாப்பிட்டாலும் சரி அது அசைந்துதான் ஆக வேண்டும். இப்படி இரண்டு காரியம் இருப்பதனாலே அது இரண்டையும் பாதியாகக் குறைக்க வேண்டும் என்பது கடவுள் அபிப்பிராயமாக இருக்க வேண்டும் என்கிறார் காஞ்சிப் பெரியவர். ஆனால் நாம் அதற்கு நேர்மாறாக நடந்து கொள்கிறோம். நாம் சாப்பிடுவதும் அதிகம். பேசுவதும் அதிகம்.

இரண்டு வேலை களையும் தேவைக்கு அதிகமாகவே செய்கிறோம். அதற்கு ஓய்வு கொடுத்தால் உடம்பும் நன்றாக இருக்கும். உலகமும் நன்றாக இருக்கும். மௌன விரதம் இருக்க வேண்டும் என்று சொல்வதும் இதற்காகத்தான்.

சத்தம் அதிகமாகியதால் தான் Sound Pollution வருகிறது. மௌனமாக இருந்தால் சண்டை சச்சரவு வராது! மௌனம் கலக நாஸ்தி! ஆக, இதுவும் ஒரு சமூக சேவைதான். வாய் இருக்கிறது என்பதற்காக வசமாகச் சாப்பிடுவதும் தப்பு... வளவள என்று பேசுவதும் தப்பு.

‘‘ஒரு கருமத்தைச் செய்வதற்கு ஒரேயொரு சொல் போதும் என்று இருக்கும் போது இரண்டு சொற்களைச் செலவு செய்யாதே! எவ்வளவு சொன்னாலும் அதனால் எந்த ஒரு பயனும் விளையாது என்று தெரிய வருமேயானால் அந்தச் சொற்களை விரயம் செய்யாதே’’ என்கிறார் சிங்சென என்கிற அறிஞர்.

‘‘எல்லாக் குணங்களிலேயும் மௌனம் தான் சிறந்தது’’ என்கிறார் ஜீனோ. மௌனமாக இருப்பதன் மூலம் மற்றவர்களுடைய குறைகளை நம்மால் தெரிந்து கொள்ள முடியும். ஒரு பெரிய மேடைப் பேச்சாளர் பொது வாழ்விலே 25 வருட காலமாக ஈடுபட்டிருக்கிறவர்.

அவர் மனைவி ஒரு நாள் சொன்னார், ‘‘எங்க வீட்டுக்காரர் 25 வருஷ காலமாகப் பொது வாழ்விலே ஈடுபட்டிருந்தால்கூட இந்த மாதம் 10ஆம் திகதியிலே இருந்து தான் மக்களுக்குச் சேவை செய்ய ஆரம்பித்திருக்கிறார்’’ ரொம்பப் பெருமையாக இதைச் சொன்னார்.

‘‘10 ஆம் திகதிக்கு அப்படி என்ன விசேஷம்?’’ என்று கேட்டேன். அன்றைய தினத்தில் இருந்து தான் அவர் மேடையிலே பேசுவதை நிறுத்தினார் என்றார் அந்த அம்மா!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# புலிகளை மக்கள் இயக்கமாக அங்கீகரித்து அவர்கள் மீதான தடையை நீக்க வேண்டும்

## கருத்துரிமை மீட்பு மாநாட்டில் வலியுறுத்தல்

இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி வரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை மக்கள் இயக்கமாக அங்கீகரித்து இந்திய அரசு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று தமிழ் நாட்டின் சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் நடைபெற்ற கருத்துரிமை மீட்பு மாநாடு வலியுறுத் தியுள்ளது.

மொழிப்போர் மாவீரர்கள் நினைவு நாளில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் கருத்துரிமை மீட்பு மாநாடு சென்னை அமைந்த கரை யில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாநாட்டிற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் தலைமை தாங்கினார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த பிரிகேடியர் சுப.தமிழ்ச்செல்வனை சிறிலங்கா இராணுவம் படுகொலை செய்தது. அவருக்கும், அவருடன் வீரமரணம் அடைந்த அனைவருக்கும் இந்த மாநாடு வீர வணக்கம் செலுத்துகிறது.

சட்டமன்ற கூட்டத்தில் ஆளுநர் உரையின்போது, தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்ததற்கும், அருந்ததியர் சமூகத்திற்கு உள் ஒதுக்கீடு வழங்கியதற்கும் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

செம்மொழியான தமிழ் மொழியை இந்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக நடைமுறைப்படுத்த விரைவில் அறிவிக்கவேண்டும் என்று இந்திய அரசை இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.



தமிழை நீதிமன்ற வழக்கு மொழியாக நடைமுறைப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை துப்பாக்கி சூடு நடத்தி கொன்று வருகிறது. இதை இந்த மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

இந்திய ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழக மீனவர்களை படுகொலை செய்வதன் மூலம் இந்தியாவின் இறையாண்மைக்கு எதிராக தொடந்து சவால்விட்டு வரும் இலங்கை அரசின் போக்கை வேடிக்கை பார்ப்பது இந்திய அரசின் ஆளுமையை கேள்விக்குறி ஆக்கியுள்ளது. தமிழக மீனவர்களை பாதுகாக்க இந்திய அரசு முன்வர வேண்டும்.

இலங்கை தமிழக மக்களின் விடுதலைக்காக போராடிவரும் தமிழீழ விடு தலைப்புலிகள் இயக்கத்தை மக்கள் இயக்கமாக அங்கீகரிக்க வேண்டும் எனவும், விடுதலைப்புலி கள் மீது பொருளாதார தடைவிதித் துள்ள நாடுகள் அதை முற்றிலுமாக கைவிட வேண்டும் எனவும், இந்திய அரசு விடுதலைப்புலிகள் மீதான தடையை உடனே நீக்க வேண்டும் எனவும், இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

இலங்கை இராணுவத்தால் பலியானவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவதும் ,இரங்கல் தெரிவிப்பதும் ஜனநாயக உரிமையாகும். ஆனால்தடையை காரணம் காட்டி இரங்கல் தெரிவிக்க கூடாது என்று சிலர் அரசியல் ஆதாயத்திற்காக ஆவேசப்படுவது வேடிக்கையாகவுள்ளது. இது ஜன நாயகத்திற்கும், மனித நேயத்திற்கும் எதிரான போக்கு என்று மாநாடு சுட்டிக்காட்டுகிறது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் ஜேர்மனி நாட்டை சேர்ந்த டாக்மர் எல்மன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், இலங்கை புதிய இடதுசாரி முன்னணி கட்சியின் நிர்வாகி ரணத் குமாரசிங்க ஆகியோர் சிறப்புரையாற்றினர். (அ-5)

# அதிகாரப் பரவலாக்கலை 20 வருடங்களுக்கு முன்னர் எதிர்த்தவர்கள் இன்று செயற்படுத்த முற்படுவது ஏன்?

## ஐ.தே.க.செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி

(கொழும்பு)

வடக்கு–கிழக்கு பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை காணும் பொருட்டு 1987ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசு 13 ஆவது அரசியல் திருத் தச்சட்டத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை அமுல்செய்யவிருந்த வேளையில் அன்று அரச மரத்தடியில் உட்கார்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்கள் எதிர்த்தனர்.

அவ்வாறு எதிர்த்தவர்களே இன்று அந்த 13ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் மூலமே மாகாணசபை மட்டத்தில் அதிகாரப் பரவலாக்கலை அமுல்படுத்துவதே இனப்பிரச்சினைக்கு தீர்வாகும் என ஏற்றுக்கொண்டு செயல்படுத்தப்போவதாக கூறுவது ஏன் என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கேள்வி எழுப்புகிறார்.

20 வருடங்களுக்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணியும் இதனை எதிர்த்தது. இவர்கள் அன்று இவ்வாறு எதிர்காமல் இருந்திருந்தால் 1987ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலான 20 வருடகாலத்தில் நாட்டில் ஏற்பட்ட கோடிக்கணக்கான சொத்தழிவுகள், மனித கொலைகள் போன்றவை இடம்பெற்றிருக்காது அவைகள் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தெற்கில் ஏற்பட்ட பதற்ற சூழ்நிலைகளை பயன்படுத்தி இலகுவாக நழுவி சென்றார். ஆனால் அன்று ஏற்பட்ட அத்தவறுக்கு ஜனாதிபதி இன்று மக்களிடம் மன்னிப்பு கோருவதே உசிதமாகும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

## இராசிபலன்

28.01.2008
(தை 14, திங்கட்கிழமை)
ஷஷ்டி முன்னிரவு 09.16 மணிவரை
அத்தம் முற்பகல் 03.35மணிவரை
இராகுகாலம் 08.06-09.35மணிவரை
சுபநேரம்-12.36-02.06 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், உடல்நலம். |
| இடபம் | தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, சொத்துப்பிணக்கு. |
| மிதுனம் | ரோகநிலை, சுபசெலவு, கல்வியில் ஆர்வம், நல்ல முயற்சி. |
| கடகம் | அந்நியர் சந்திப்பு, சகோதரர் உதவி, பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | மனோசங்கடம், அதிக செலவு, வேலைச்சுமை, ரோகநிலை. |
| கன்னி | ஜனவசியம், நல்ல முயற்சி, போசன சுகம், பெரியோர் உதவி. |
| துலாம் | மனச்சோர்வு, காரிய அலைச்சல், சுபசெலவு, சய்ன சுகக்குறைவு. |
| விருச்சிகம் | தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும். |
| தனுசு | உற்சாகம், சுபநிகழ்வு, மேன்மையடைதல், நண்பர்கள் உதவி. |
| மகரம் | அச்சமான நிலை, பிரயாணம், தொழில் நன்மை, புதிய திட்டமிடல். |
| கும்பம் | நிலைமாற்றம், வீண்பகை, உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம். |
| மீனம் | நண்பர்கள் சந்திப்பு,காரிய நன்மை, பொருள் சேர்க்கை. |

வைகன்

# தீர்வு யோசனைகளுக்கு எதிராக ஜே.வி.பி ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானம்

(கொழும்பு)

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தீர்வுயோசனைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கூட்டங்களை நடத்த மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்திருப்பதாக தெரிய வருகின்றது. மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபையின் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பயங்கரவாத அமைப்பு நாட்டிற்குள் செயல்பட்டுவரும் போது இவ்வாறான யோசனையை கொண்டு வருவது தவறானதாகும்.

அதே வேளை பாதுகாப்பு பிரிவினர் வடக்கை மீட்பதற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும் என்றும், இது ஜே.வி.பி.யின் அரசியல் சபையின் தீர்மானமாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)

# கதிர்காம முருகன் ஆலய பூசைகள் நிறுத்தம்?

(கொழும்பு)

அண்மையில் புத்தல–ஒக்கம்பிட்டிய வீதியில் ஏற்பட்ட கிளேமோர் வெடிப்பின் பின்னர் புத்தல–கதிர்காமம் வீதி மூடப்பட்டமையைத் தொடர்ந்து சரித்திரப் பிரசித்திபெற்ற கதிர்காம முருகன் கோவிலை, கோவில் நிர்வாகத்தினர் பூட்டியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளியிடங்களிலிருந்து யாத்திரர்கர்களும் உல்லாசப் பயணிகளும் வாரமையால் விடுதிகளும், உணவகங்களும் பூட்டவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நடைபாதை வியாபாரிகளும் தங்கள்வியாபாரநடவடிக்கையை நிறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. (அ-5)


# வெளிநாட்டு மாணவர்கள் பகுதி நேர வேலைவாய்ப்பு பெறுவதற்கான வழிமுறைகள்

அமெரிக்கா, பிரித்தானியா நாடுகளில் பின்பற்றப்படும் விதிமுறைகள்.

அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் வெளிநாட்டு மாணவர்கள் பகுதி நேர வேலைகளில் பணியாற்ற அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களின் செலவுகளை சமாளிக்க ஓரளவிற்கு இது உதவிக் கரமாக இருக்கிறது. ஆனால் அனைத்து நாடுகளிலும் இதற்கான விதிமுறைகள் ஒரே மாதிரியானஅளவில் இல்லை. அது பற்றி தெரிந்து கொள்ளலாம்.

**அமெரிக்கா**

அமெரிக்காவில் கல்வி பயிலும் வெளி நாட்டு மாணவர்களுக்கு வாரந்தோறும் 20 மணி நேரம் பணியாற்ற அனுமதி அளிக்கப்படுகிறது.



ஆனால் கல்வி நிலைய வளாகத்திற்குள் தான் பணியாற்ற வேண்டும். ஆய்வக உதவியாளர், நூலக உதவியாளர் அல்லது சாப் பாட்டு அறைகூடம் ஆகியவற்றில் பணியாற்று வதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

எனினும் வாரத்தில் 20 மணி நேரத்திற்கு மேல் பணியாற்ற அனுமதியளிக்கபடுவதில்லை. இதில் விதிவிலக்காக விடுமுறை காலங்களில் மட்டும் வாரந்தோறும் 40மணி நேரம் பணியாற்ற அனுமதிக்கப்படுகின்றனர்.

F-1 மாணவர் 'விசா' பெற்றால் பட்டப்படிப்பை முடித்த பிறகு Optional Practical Training (OPT) திட்டத்தின் கீழ் ஓராண்டு பணியாற்ற அனுமதிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் ஓராண்டு பணியை நீங்கள் பூர்த்தி செய்து விட்டால் தொடர்ந்து பணியாற்றுவதற்கு வேர்க் பேர்மிட் எனப்படும் வேலை அனுமதி பத்திரத்தை (H-1) பெறுவ தற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இந்த வேலை அனுமதிப்பத்திரம் மூன்று ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது. இதை ஒரு முறை புதுப்பிக்கலாம். இதன் மூலம் மொத்தம் ஆறு ஆண்டுகள் வேலை அனுமதிப்பத் திரத்தை பெற்று பணியாற்றும் வாய்ப்பு கிடைக் கிறது.

இதனால் அமெரிக்காவில் பட்டப்படிப்பை முடித்த பிறகு 7ஆண்டுகள் பணியாற்றுவதற் கான வாய்ப்பை பெறலாம். அன் பிறகு தொடர்ந்து அமெரிக்காவில் பணியாற்றுவதற்கு 'கீரின் கார்ட்' தேவைப்படுகிறது.

**பிரித்தானியா**

பிரித்தானியாவில் கல்வி கற்கும் வெளி நாட்டு மாணவர்கள் வாரத்தில் 20மணி நேரம் எங்கு வேண்டுமானாலும் பணியாற்றலாம். உங்களுடைய பல்கலைக்கழகத்தின் அருகில் உள்ள துணிக்கடையிலோ அல்லது ரெஸ்டாரண்ட் டிலோ நல்ல ஊதியத்தில் வேலை கிடைத்தால் அதில் சட்டபூர்வமாக சேர்ந்து கொள்ள லாம்.

ஆனால் வாரத்தில் 20 மணி நேரத்திற்கும் மேல் பணியாற்றாமல் கவனத்துடன் இருக்க வேண்டும்.

பிரித்தானியாவில் Training And Work Experience Scheme (TWES), the Highly Skilled Migrant Programme (HSMP) and the Fresh Talent Scheme (Scatland) ஆகிய திட்டங்களின் கீழ் வேலை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகிறது அதன்படி வெளி நாட்டு மாண வர்கள் படிப்பை முடித்த பிறகு பிரித்தானியாவில் வேலை பார்க்க அனுமதிக் கப்படுகின்றனர். ஆனால் தற்போது பிரிட்டனில் வேலை கிடைப் பது குதிரைக்கொம்பாக, அதாவது




மிகவும் கடின் மாக இருக்கிறது என மாணவர்கள் தெரிவிக் கின்றனர்.

அதனால் பிரித்தானியாவில் பல்கலைக் கழகத்தை தேர்வு செய்வதற்கு முன் மிகவும் கவனமுடன் இருக்கவேண்டும்.

**கனடா**

கனடாவை பொறுத்தவரை வேர்க் பேர்மிட் எனப்படும் வேலை அனுமதிப்பத்திரத்தை பெறுவது மிகவும் எளிது. கனடாவில் உள்ள கல்வி நிறுவனம் ஒன்றில் ஆறு மாதம் கல்வி பயின்றால் கல்வி வளாகங்களுக்கு வெளியே வேலை செய்வதற்கான அனுமதி பத்திரத்தை பெறுவதற்கு நீங்கள் தகுதி பெற்றுவிடுவீர்கள்.

அங்குள்ள மாகாண அரசுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி முழு நேர படிப்பு பயில்பவர்கள் திருப்திகரமான மதிப்பெண் வைத்திருந்தால் வாரந்தோறும் வெளியிடங்களில் அதிகபட்சம் 20 மணி நேரம் வேலை பார்ப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம்.



மாணவர்கள் பரிமாற்ற திட்டத்தின் கீழ் வந்தவர்கள் ஆங்கிலம் அல்லது பிரஞ்சை இரண்டாம் மொழியாக கொண்ட படிப்புகளில் சேர்ந்தவர்கள் கனடிய காமன் வெல்த் ஸ்கொலர்ஷிப் திட்டத்தின் கீழ் கல்வி பயில வந்தவர்கள் கனடா அரசின் விருது திட்டம் அல்லது கனடியன் சர்வ தேச் டெவலப் மென்ட் ஏஜென்சி திட்டங்களின் கீழ் வந்தவர்கள் ஆகியோர் வேலை அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப் பிக்க முடியாது. கனடாவில் தற்போது கல்விப யின்று வரும் 1 இலட்சம் வெளி நாட்டு மாணவாகள், வெளிவளாக வேலை அனுமதிப்பத்திரத்தின் கீழ் வேர்க் பேர்மிட் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளதாக கனடிய குடியுரிமை மற்றும் குடியேற்றத் துறைக்கான இணையத் தளம் தெரிவிக் கிறது.

பட்டப்படிப்பை முடித்த பிறகு தொடக்கத்தில் வேலை அனுமதி பத்திரம் கோரி விண்ணப் பிக்கலாம். இந்த அனுமதிப் பத் திரத்தை பெற்றால் ஓராண்டு பணியாற்றலாம். இதைபுதுப்பிப் பதன் மூலம் மேலும் ஓராண்டு பணியாற்றுவதற்கு வாய்ப்பு தரப்படும். இதன் மூலம் பட்டப் படிப்பை முடித்த பிறகு 2 ஆண் டுகள் கனடாவில் பணியாற் றலாம். அதன் பிறகு கனடாவில் குடி யேறு வதற்கான குடிமகன் உரிமையை பெறுவதற்கும் பணியாற்றுவதற்கான உரிமையை பெறுவதற்கும் நீங்கள் விண்ணப்பிக்க தகுதி பெற்று விடுவீர்கள்.

**அவுஸ்திரேலியா**

அவுஸ்திரேலியாவில் கல்வி பயிலும் போது கல்வி வளாகத்திற்கு வெளியே பணியாற்றுவதற்கு அதிக பட்சமாக வாரத்தில் 20 மணி நேரம் அனுமதியளிக்கப்படுகிறது.

விடுமுறை காலங்களில் இது வாரத்திற்கு 40 மணி நேரமாக அனுமதிக்கப்படுகிறது. இருந்த போதிலும் அவுஸ்திரேலிய கல்வி நிலையங்க ளில் சேர்ந்தவுடன் வளாகத்திற்கு வெளியே பணி யாற்றுவதற்கு தானாகவே அனுமதி கிடைத்து விடாது. அதற்கான அனுமதியை பெற விண்ணப்பிக்க வேண்டும்.

அமெரிக்கா, கனடா, தபிரித்தானிய ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும் போது அவுஸ்திரேலியாவில் வேலை அனுமதிப்பத்திர விதிமுறைகள் மிகவும் கடினமானதாக இருக்கிறது. இருந்த போதிலும் அவுஸ்திரேலிய அரசாங்கம் தற் போது வேலை பெறுவதற்கான தகுதியை பெற்றுள்ள மாண வர்களுக்கு வேலை அனுமதி பத்திரங் களை அளிக்கிறது.

இதன் மூலம் அவர்களின் வேலை அனுமதி பத்திரங்களில் புள்ளி திட்டத் திற்கு தேவையான புள்ளிகளை சேர்க்க முடி யும்.

**சிங்கப்பூர்**

சிங்கப்பூரில் உள்ள பொதுவான விதி முறை என்னவென்றால் கல்விபயிலும் போது பணியாற்றுவதற்கு வெளி நாட்டுமாணவர் கள் அனுமதிக்கப்படுவ தில்லை. மிகவும் அரிதாக தான் பகுதி நேர பணியாற்ற மாணவர் களுக்கு அனுமதிய ளிக்கப்படுகிறது.


அதே போல் பட்டப்படிப்பை முடித்த பிறகு வேலை அனுமதிப்பத்திரம் பேறுவதற்கான வாய்ப்பும் அவ்வளவு பிரகாசமாக இல்லை. அனுபவத் தையும் தகுதியையும் பொறுத்தே வேலை அனு மதிப்பத் திரம் வழங்கப்படுகிறது.

பிற நாடுகளை போல் சிங்கப்பூரிலும் தொழிலாளர்சட்டத்தின் படி அந் நாட்டு குடிமகன்களுக்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. சிங்கப்பூரில் பணியாற்ற விரும்பும் வெளி நாட்டினர். வேலை அனுமதிப்பத்திரம் கோரி விண் ணப்பிக்கவேண்டும்.

அல்லது வேலை அளிக்கும் நிறுவனத்தின் மூலம் வேலை அனு மதிக்கான பத்திரத்தை பெற வேண்டும்.

*

# அமெரிக்கா செல்ல சாட் தேர்வு



அமெரிக்க பல்கலைக்கழகங்களிலும் பல் வேறு கல்லூரிகளிலும் நடத்தப்படும் பட்டப்படிப் புகளில் சேர விரும்பும் பிற நாட்டு மாணவர் கள் எழுதி வெற்றி பெற வேண்டிய நுழைவுத் தேர்வுபோன்றதுஸ்காலஸ்டிக் ஆப்டிடியூட் டெஸ்ட் எனப்படும் சாட்தேர்வு . இதில் 2 தேர்வுத் தாள் கள் உள்ளன. சாட் தேர்வின் முதல் பகுதி நமது பகுத்தறியும் திறனையும் அடிப்படைக் கணி தத் திறனையும் பரிசோதிக்கிறது. அமெரிக்க பட்டப்படிப்புகள் அனைத்திற்கும் பொதுவாக இதில் வெற்றி பெறுவது அடிப்படைத் தகுதியாக அமைகிறது. சில பல்கலைக் கழகங்கள் சாட் 2 தேர்வையும் கட்டாயமாக வைத்திருக்கின்றன.

இது பொதுவாக 3 மணி நேரத் தேர்வாக நடத்தப்படுகிறது. இது அப்ஸஜக்டிவ் வகைத் தேர்வாகவே நடத்தப்படுகிறது. சாட் 2 தேர்வானது ஒரு மணி நேரத்தேர்வாக நடத்தப்படுகிறது. இதுவும் அப்ஜக்டிவ் வகைத் தேர்வுதான். எந்தபாடத்தில்பட்டப்படிப்பைஅமெரிக்கபல்கலைக் கழகங்களில் படிக்க விரும்புகிறீர்களோ அந்த பாடத்தில் இந்த 2ஆம் தாளை எழுத வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள கல்லூரி அனுமதிப் பரீட்சை சபை என்னும் அமைப்பே இந்தத் தேர்வை நடத்துகிறது. இதுவே வினாத்தாள் அமைத்தல், விடைத்தாள் திருத்துதல், ஸ்கோர் கார்ட் அனுப்புதல் ஆகிய அனைத்துதையும் இந்த அமைப்பே பார்த்துக்கொள்கிறது. ஆண்டுக்கு சுமார் 6 முதல் 7 தடவை இது நடத் தப்படுகிறது. தளத்தில் www.collegboard.com முழு விபரங்களை பார்த்துக் கொள்ளலாம்.

# கனடாவில் எக்கவுன்டிங் ஒன்லைன் படிப்புகள்




உள்நாட்டு பல் கலைக்கழகங்கள் நடத்துவதை தபால் வழிப் படிப்புகள் என் கிறோம்.

இதையே வெளி நாட்டு நிறுவனங் கள் ஒன்லைன் படிப் புகளாக அறிமுகம் செய்கின்றன. இன் டர்நெட் வரவால் தொலைநிலைக் கல்வி அனைத்தும் இன்டர்நெட் வழியாக நடத்துவது எளி தாக அமைகின்றன. எக்க வுன்டன்சி முடித்த இலங்கை மாணவர் கள் கன டாவிலுள்ள பல் கலைக்கழகங் களில் ஒன்லைன் மூலம் படிக்க முடியும்.

ஹம்பர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னோலஜி அன்ட் அட்வான்ஸ்ட் லேர்னிங் எனும் கல்வி நிறுவனமும் www.humber .ca, துர்ஹாம் கல்லூரி www.durhamcollege.ca, அத பாஸ்கா பல்கலைக்கழகம் www.athabascau.ca மற்றும் வெஸ்டர்ன் ஒன்டாரியோ www.uwo.ca ஆகிய கல்வி நிறுவனங்கள் ஒன்லைன் எக்க வுன்டன்சி படிப்புகளைக் கொண்டிருக்கின் றன.

இந்த கல்வி நிறுவனங்களில் படித்தவர் தள் கனடாவில் வேலை வாய்ப்புப் பெற தகுதி யானவர்கள் என்றாலும் கூட வேலை பெறுவதற்கு பிற தகுதிகளையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

நிவாஷன்

# வடபோர் முனைப் பாதுகாப்புப் பொறிமுறையால் ஆபத்து வலயமாகும் தென்னாசிய கடற்பகுதி

உலகில் ஏற்பட்டு வரும் பொருளாதார தளம்பல்கள் பல முக்கிய நாடுகளை திண்டாட வைத்துள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை ஆசியா மற்றும் ஐரோப்பிய பங்கு சந்தைகள் சந்தித்த மிகப் பெரும் சரிவுகள் வியாழக்கிழமையே ஓரளவு சீரான நிலையை அடைய ஆரம்பித்துள்ளன. இருந்த போதும் அதனால் ஏற்பட்ட இழப்புக்கள் மிக மிக அதிகம்.

இந்த இழப்புக்களை ஈடுகட்டுவதற்கு தமது செலவீனங்களைக் குறைத்து மக்கள் மீதான வரிப்பணத்தை அதிகரிப்பதே சிறந்த வழி என பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எண்ணியுள்ளன. உலகின் செல்வ செழிப்புமிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள இந்த தக்கம் அதன் தயவில் தங்கியுள்ள மூன்றாம் உலக நாடுகளையும் கடுமையாக பாதிக்கவே செய்யும்.

இலங்கையைப் பொறுத்தவரை மிகவும் அதிக பாதுகாப்பு நிதியை ஒதுக்கி போரை தீவிரப்படுத்தி வருகையில் உலகில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் களத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் விரும்பத்தக்கதாக காணப்படவில்லை.

போருக்காக அதிக நிதி வாரி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கையில், அதனால் நாட்டின் வருமானத்துறையில் ஏற்பட்டு வரும் தாக்கங்கள் ஆண்டுக்கான போர் செலவீனங்களை விட பல மடங்கு அதிகமாகும்.

முற்றாக முடங்கும் நிலையை அடைந்து வரும் உல்லாசப்பயணத்துறை, வரண்டு போன முதலீடுகள், அதிகரித்த வேலையில்லாத்திண்டாட்டம், அதிகரிக்கும் விலை உயர்வுகள் என அரசு கடும் நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருக்கையில் எதிர்பார்க்காத பல களமுனைகள் புதிதாக திறக்கப்படுவதும் பெரும் நெருக்கடிகளை தென்னிலங்கையில் ஏற்படுத்தி வருகின்றது.

மொனராகல மாவட்டத்தில் இருந்து அம்பாந்தோட்டை மாவட்டம் வரையிலும் கடந்த வாரம் தோன்றிய அச்சமான நிலைமை தற்போது கண்டிக்கும் பரவியுள்ளது.கண்டி மாவட்டத்தில் உள்ள ரத்தெம்பை நீர் மின் நிலையத்தை அண்டிய அடர்ந்த காட்டுப்பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகள் நடமாடியதாக சிங்கள மக்கள் தெரிவித்த தகவலைத்தொடர்ந்து அந்தப் பகுதியின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் படையினரும் பொலிஸாரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

இதன் இடையே கடந்த வியாழக்கிழமை கெப்பிட்டிக்கொல்லாவையில் உள்ள கொரவப்பொத்தானை கிரிகெட்டுவாவப் பகுதியில் இருந்து 16 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதானது, தென்னிலங்கையின் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

ஒரு குழியினுள் 10 சடலங்களும் மற்றைய குழியினுள் 6 சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பக்கட்ட தகவலின் படி 10 நாட்களுக்கு முன்னர் புதைக்கப்பட்டுள்ள அந்த சடலங்களின் கைகள் பின்புறமாகக்கட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதற்கான தடயங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஒரு படைத்துறை வெற்றியை எதிர்பார்த்துள்ள அரசிற்கு இந்த நிகழ்வுகள் எதிர்மறையானவை. எதிர்வரும் 4ஆம் திகதி இலங்கையின் 60ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் போது ஒரு படைத்துறை வெற்றிச் செய்தியைக்கொடுத்துவிட அரசு கடுமையாக முயற்சி செய்து வருவது யாவரும் அறிந்ததே.

அதன் வெளிப்பாடாகவே மன்னார், மணலாறு, வவுனியா தெற்கு, யாழ்.குடாநாட்டின் தென்முனை என தினமும் மோதல்கள் தீவிரமடைந்துவருகின்றன. படைத்தரப்பு தமது இழப்புக்கள் தொடர்பாக தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறபோதும் விடுதலைப் புலிகள் மோதல் தொடர்பான படையினரின் இழப்புக்களை தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

மன்னாரின் வடமுனையில் படையினர் படை தமது சிறப்பு மற்றும் கொமோண்டோ படையினரை நடவடிக்கையில் ஈடுபடுத்தி வருகையில் விடுதலைப்புலிகள் தமது குறிபார்த்து பதுங்கி சுடும் படையணியை அங்கு நகர்த்தியுள்ளனர்.

தமக்கு எதுவித சேதங்களுமின்றி எதிரிக்கு அதிக சேதத்தையும் உளவியல் தாக்கத்தையும் கொடுக்கும் இந்த போரியல் உத்தி கடந்த வாரம் படையினருக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பாளைத்குழி கள முனையில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னகர முனைந்த 58 ஆவது படையணியின் கொமோண்டோ றெஜிமென்ட் படையினர் மீது விடுதலைப் புலிகளின் பதுங்கி குறிபார்த்து சுடும் படையணியினர் நடத்திய தாக்குதலில் 12 கொமோண்டோக்கள் கொல்லப்பட்டதுடன், 27 பேர் படு காய



ஆளில்லாத கடற்பாதுகாப்பு பொறிமுறை கலம்

மடைந்துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். எனினும் இதனை படைத்தரப்பு மறுத்துள்ளது. பொதுவாக பெரும் சமர்க்களங்களில் குறிபார்த்து சுடும் படையணிகளின் பங்கு முக்கியமானது.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற தீச்சுவாலை நடவடிக்கையின் போது விடு தலைப்புலிகளின் தனி ஒரு போராளி 40ற்கு மேற் பட்ட படையினரை குறி பார்த்து சுட்டுவீழ்த்தினார் என்று விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது உலகப்போரின் போது சோவியத்தின் ஸ்ராலின்கிராட் பகுதியை ஆக்கிரமித்த ஜேர்மனின் சிறப்புப்படையணி பற்றாலியன்களை வீழ்த்த சோவியத் இராணுவம் அதிகளவிலான குறிபார்த்துச் சுடும் வீரர்களை நடவடிக்கைளில் ஈடுபடுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

சோவியத் படையினருக்கு குறிபார்த்து சுடும் பயிற்சியை வழங்கிய ஆசிரியர் களத்தில் தனி ஒருவராக 273 ஜேர்மன் சிறப்புப் படையினரை குறிபார்த்து சுட்டு வீழ்த்தியது இன்றும் சோவியத்து மக்களின் நினைவுகளை விட்டு நீங்கவில்லை.

இப்படியாக வட போர் முனை தினமும் பல நெருக்கடிகளை படையினருக்கு ஏற்படுத்தி வருகையில் தென்னிலங்கையில் தோன்றி வரும் அச்சுறுத்தல்கள் அரசிற்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அரசு தனது முக்கிய கேந்திரமையங்களை பாதுகாப்பதற்காக தீவிரமாக முயன்று வருகின்றது. இலங்கை விமானப் படையினர் வன்னி மீது பெரும் எடுப்பிலான தாக்குதல்களை நடத்தி வருகையில் விமானப்படையினரின் மிகையொலி தாக்குதல் விமானங்களின் தரிப்பிடமான கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீண்டும் வான் அல்லது தரை வழித்தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற அச்சமும் தொடர்ந்து வருகிறது.

இதனால் கட்டுநாயக்க விமானத்தளத்தின் விமானங்களின் தரிப்பிடங்கள் 5 அடி கொங்கிறிட் சுவர்கள் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் 6 க்கு மேற்பட்ட வலையங்களாக பாதுகாப்பு நிலைகளும் அமைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் 200 சிறப்பு இராணுவ கொமோண்டோக்களும் 100 விமானப் படை கொமோண்டோக்களும் பாதுகாப்பு பணியில் அமர்த்தப்பட்டுள்ளதுடன் குறிபார்த்து சுடும் படையினரையும் அங்கு அரசு நிறுத்தியுள்ளது. இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் தரை வழியிலான விடுதலைப்புலிகளின் அதிரடித்தாக்குதலை தடுக்கும் நோக்குடன் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விடுதலைப்புலிகளின் வான் படைத் தாக்குதலை தடுக்கும் நோக்குடன் ஒத்திகைகளும் நடத்தப்பட்டுவருகின்றன. குறிப்பாக விடுதலைகளின் இலகுரக விமானங்களை விமானப்படையினர் எவ்வளவு விரைவாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கின்றார்கள் என்பதற்கான ஒத்திகைகள் கடந்த வாரம் கட்டுநாயக்கா விமானப்படைத்தளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்காக வை-12 ரக சிறிய போக்கு வரத்து விமானம் ஒன்று விளக்குகள் அணைக்கப்பட்ட நிலையில் பறக்கவிடப்பட்டு தரையிலிருந்து விமான எதிர்ப்பு படையினர் தேடுதல் வெளிச்சங்கள்(Search Light ) மூலம் அதன் பறக்கும் புள்ளியை கண்டறியும் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

அதாவது இலங்கையின் 60 ஆவது சுதந்திரதின விழாவிற்கு முன்னர் அல்லது அதன் போது அரசு கொடுக்க நினைக்கும் இராணுவ வெற்றியை மறுதலையாக்கி விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்திவிட்டால் அரசிற்கு பெரும் நெருக்கடிகள் தென்னிலங்கையில் தோன்றி விடாலம் என்ற அச்சம் தற்போது தலைதூக்கியுள்ளது.

எது எப்படி இருப்பினும் போர் இலங்கைத் தீவு முழுவதையும் மெல்லமெல்ல சூழ்ந்து வருவதே யதார்த்தமானது. ஆனால் எதிர்கொள்ளத் தோவையான படை மற்றும் பொருளாதார வளங்கள் அரசிடம் உள்ளனவா என்பது தான் தற்போதுள்ள மிகப்பெரும் கேள்வி. தென்னிலங்கையில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்


நீருக்கு அடியில் உள்ள கடற்பாதுகாப்பு ஆயுதம்

கும் சராசரியாக 5ஆயிரம் படையினரை பாதுகாப்பில் ஈடுபடுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை அங்கு உருவாகி வருகிறது.

**பொலிஸார், படையினர் , கடற்படையினர், விமானப்படையினர் , ஊர்காவல்படையினர் என அரசின் எல்லாப்பபை டவளங்களும் முழு இலங்கைக்கும் பரவலடைந்துள்ள நிலையில் வடபோர் முனையின் கடல் எல்லையினை பாதுகாப்பதற்காக புதிய பொறிமுறைகளை அரசு மேற்கொண்டுள்ளது.**

அதாவது கடந்த டிசம்பர் மாதம் நெடுந்தீவு கடற்பகுதியில் நடைபெற்ற கடற்சமரில் அதிவேக டோராப் படகு மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ் .குடாநாட்டின் மேற்கு கடற்பகுதி விநியோகமும் பாதுகாப்பும் பெரும் நெருக்கடிகளை சந்திக்கப்போகிறது என்ற உண்மையை இலங்கை கடற்படையினர் உணர்ந்துள்ளனர்.

எனவே அதிவேக தாக்குதல் கலங்களினால் பாதுகாக்க முடியாத அந்த கடற்பகுதியை கடற்கண்ணிவெடிகள், கடல் அடி தேடுகருவிகள் (Sonar) கொண்டு பாதுகாப்பதற்கு கடற்படை யினர் முயற்சித்துள்ளனர்.

அதாவது தமிழகத்திற்கும் மன்னாருக்கும் இடைப்பட்ட கடற்பிரதேசத்தில் கடற்கண்ணிவெடிகள் அதிகளவில் விதைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் இந்திய கடற்படையினருக்கு தெரிவித்துள்ளனர்.

இது இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் குறிப்பாக பார்க்கு நீரிணையில் பெரும் அச்சத்தை தோற்றிவித்துள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் உலகில் அதிக மிதிவெடிகள் புதைக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அதன் கடற்பகுதிகளும் கண்ணிவெடிகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருப்பது இலங்கைத்தமிழ் மீனவர்கள் மட்டுமல்லாது தமிழக மீனவர்களும் பெரும் அழிவுகளை எதிர்கொள்ளவே வழிவகுக்கும்.

கடற்கண்ணிவெடிகளைப் பொறுத்த வரையில் அவற்றில் பல வகைகள் உண்டு. எனினும் 50கிலோ நிறையுடைய மிதக்கும் கடற்கண்ணி வெடிகள் நங்கூரத்தின் அல்லது கடல் அடிப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள இணைப்புகளா மூலம் நீர்மட்டத்தில் இருந்து சில அடிகள் கீழே விதைக்கப்பட முடியும். நேரடியான தொடுகைகள் (Contact Mines) மூலம் வெடிக்கும் கடல் கண்ணிவெடிகள் அல்லாது தன்னிச்சையாக (Influence Mines) வெடிக்கும் கண்ணி வெடிகளையே கடற்படையினர் விதைத்து வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

தீவகப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் தரையிறக்கத்தை தடுக்கும் உத்தியும் இதில் அடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் தமிழக மீனவர்களும் இடம்பெயர்ந்து தமிழகம் செல்லும் இலங்கைத் தமிழ் மக்களுமே இந்த கடற்பகுதிகளை அதிகம் பயன்படுத்துவதுண்டு.

கண்ணிவெடிகளை விதைக்கும் போது அவை மீள எடுக்கப்படுவதற்கான சரியான நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும். இல்லாது விட்டால் அவை நீண்ட காலத்திற்கு இந்த கடற்பிரதேசங்களில் பெரும் அழிவுகளை ஏற்படுத்த வல்லவை. **பெரும்பாலான கண்ணிவெடிகள் 10 வருடங்கள் கூட செயற்திறன் மிக்கதாக இருக் கக் கூடியவை .**

மேலும் நங்கூரம் அல்லது இணைப்பிகள் மூலம் இணைக்கப்படும் **கண்ணிவெடிகள் கடல் அலையுடன் அல்லது கடல் விலங்குகளின் தாக்குதல்கள் மூலம் இடம் மாறிச் செல்லவும் வாய்ப்புக்கள் உள்ளதாக படைத்துறை அவதானிகள் தெரிவித்துள்ளனர்.**

ஏற்கனவே 300க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக பழ.நெடுமாறன் போது தோன்றியுள்ள நிலை மிகவும் ஆபத்தானதாகவே நோக்கப்படுகின்றது.

தமிழக அரசு சேது சமுத்திரத்திட்டத்தின் மூலம் தூத்துக்குடி துறைமுகத்தை அபி விருத்தி செய்ய எண்ணிவருகையில், இலங்கை கடற்படையினரின் இந்த நடவடிக் கைகள் வர்த்தகக் கப்பலுக்கும் எதிர்காலத்தில் பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தக் கூடியவை .

**இலங்கை மிகவும் ஆபத்தான நாடாக மாறி வருவதாக உலகின் முன்னணி நாடுகள் தமது மக்களுக்கு எச்சரிக்கைகளை விடுத்து வருகையில் அதன் கடற்பகுதிகளும் தற்போது ஆபத்தாக மாறிவருவது கப்பல் வர்த்தகத்துறையை கடுமையாக பாதிக்கலாம் என்ற கருத்துத்தோன்றியுள்ளது.**

## வேல்ஸிருந்து அருஷ்

மொத்தத்தில் தென்னாசியாவின் முனைப்பு பகுதி மிகவும் ஆபத்தாக நாளுக்கு நாள் மாறி வருவது கவனிக்கத்தக்கது.
*

# கென்யாவில் மீண்டும் பயங்கர கலவரம்
## முக்கிய நகரில் ஊரடங்கு உத்தரவு

(நைரோபி)

கென்யாவில் தேர்தல் கலவரம் இன்னும் ஓய்ந்த பாடில்லை. அந்நாட்டில் மீண்டும் நடந்த பயங்கர கலவரத்தில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

கென்யாவில் அண்மையில் நடந்த அதிபர் தேர்தலில் கிபாகி தில்லுமுல்லு செய்து வெற்றி பெற்று விட்டதாக எதிர்க்கட்சிகள் கூறி போராட்டத்தில் ஈடுபட்டன.

இது பின்னர் இனக் கலவரமாக மாறியது. இந்தக் கலவரத்தில் இது வரை 800பேர் வரை பலி யாகி விட்டனர்.

கலவரத்தை முடிபுக்கு கொண்டுவரும் நோக்கில் 2 நாட்களுக்கு முன்பு அதிபர் கிபாகி எதிர்க்கட்சித் தலைவர் ரைலா ஒடிங்காவை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இத னால் மீண்டும் கலவரம் ஏற்பட வாய்ப்பில்லை என்ற நம்பிக்கை பிறந்தது.

எனினும் கென்யாவின் பல பகுதிகளில் மீண்டும் பயங்கர வன்முறை வெடித்தது.

அந் நாட்டின் மத்திய பகுதியில் உள்ள நகுருவில் இரு தரப்பினரும் இரும்புத் தடிகள், ஈட்டிகள் வில்-அம்புகள் போன்ற ஆயுதங்களுடன் கடு மையாக மோதிக்கொண்டனர்.

அவர்கள் ஒருவருக்கொருவர் கற்களையும் வீசி தாக்கிக் கொண்டனர். பல கட்டடங்களுக்கு தீ வைக்கப்பட்டன. வாகனங்களில் சென்றவர்கள் கல்வரக்காரர்களால் வழி மறித்து தாக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து நகரின் முக்கிய பகுதிகளில் இருந்த அனைத்து வர்த்தக மையங்களும் கடைகளும் அடைக்கப்பட்டன. நகுரு நகரமோ போர்க்களம் போல் காட்சியளித்தது.

இந்த கலவரத்தில் 10 பேர் வரை பலியாகி விட்டார்கள் 100-க்கும் மேலானவர்கள் படுகாயமடைந்தார்கள். இவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

புறநகர் பகுதியான சகாப் மற்றும் கப்டேம்பே ஆகியவற்றில் வசிப்பவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளானார்கள். இப் பகுதி மக்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தேவாலயங்களிலும் பொலிஸ் நிலயைங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.


கலவரத்தைத் தொடர்ந்து நகருக்கு இராணுவம் வரவழைக்கப்பட்டது. அங்கு ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. இராணுவத்தினரும் பொலிஸாரும் நகரில் தீவிர ரோந்து வருகிறார்கள்.

கலவரம் பரவியதைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினரை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு கென்ய வெளியுறவு மந்திரி மோசஸ் அழைத்துள்ளார்.

ஐ.நா. சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனானும் பேச்சுவார்த்தை மூலம் சுமூகத் தீர்வு கண்டு கலவரத்தை முடிபுக்கு கொண்டு வரும் படி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

(அ-5)

## வாபஸ் இல்லை



(பாக்தாத்)

ஈராக்கில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்கதையாகவுள்ள நிலையில் அமெரிக்கா படையினர் அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். அங்கு படைகளை குறைக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தாலும் பாதுகாப்பு காரணங்களைக் கருத்தில் கொண்டு படைகளை திரும்பப் பெற அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் மறுப்பு தெரிவித்துள்ளார்.

படைகளின் ரோந்து தீவிரமாக நடக்கும் தெற்கு பாக்தாத் நகரின் மார்க் கெட் பகுதியில் மேஜை கால்பந்து'விளையாட்டை நடத்தி வரும் இந்த இளைஞர் வாடிக்கையாளர்கள் வருகைக்காக காத்திருக்கிறார்.

(அ-5,7)

## உலக தரிசனம்

# அதிகசொக்லேட் சாப்பிடுவது எலும்புகளை பாதிக்கும்

(நியூயோர்க்)

சொக்லேட்டுகளை அதிகமாக விரும்பி சாப்பிடுவது சிறு குழந்தைகள் மட்டுமல்ல பெரியவர்களும்தான் . சொக்லேட் மற்றும் சொக்லேட் அதிகமாக கலந்த உணவுகளை சாப்பிடுவது இருதயத்துக்கு நல்லது என்பது உண்மைதான்.

ஆனால் சொக்லேட்டுகளை தினம் தினம் சாப்பிடுவதும் அதிகமாக சாப்பிடுவதும் எலும்புகளை பாதிக்கும் என்று புதிய ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மேற்கு அவுஸ்திரேலியாவை சேர்ந்த டாக்டர் ஜெனாதன் ஹட்சன் நடத்திய ஆய்வில் தினமும் சொக்லேட் சாப்பிடுபவர்களுக்கு எலும்புகள் வலு இழக்கும் அபாயம் உள்ளது. இதனால் எலும்புகள் எளிதில் முறிந்து விடும்.

சொக்லேட்டில் கல்சியம் சத்து இருக்கிறது. இந்த கல்சியம் சத்து எலும்புகளை வலுவடையச் செய்யும். ஆனால் அதே நேரத்தில் அதில் உள்ள ஆக்சலேட் என்ற பொருள் கல்சியம் சத்தை உறிஞ்சி எலும்புகளில் சேரவிடாமல் தடுத்து விடுகிறது.

இவ்வாறு அந்த ஆய்வில் அந்த டாக்டர் கூறியுள்ளார். ஆயிரம் பெண்களிடம் அவர் இந்த ஆய்வை மேற்கொண்டார்.

(அ-5)

# அமெரிக்காவின் உளவு கோள் பூமியில் மோதும் அபாயம்
## நடுவானில் அழிக்க முயற்சி

(வாஷிங்கடன்)

அமெரிக்கா கடந்த சில ஆண்டுகளுக்கு முன் உளவு பார்க்கும் செயற்கை கோள் ஒன்றை விண்ணில் பறக்கவிட்டது. விண்வெளியில் சுற்றி வந்த இந்த செயற்கை கோள் இப்போது நாசா நிறுவனத்தின் கட்டுப்பாட்டை இழந்து விட்டது. சுற்றுப் பாதையில் இருந்து விலகி அந்த செயற்கைகோள் இப்போது பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

இந்த செயற்கை கோளில் நச்சுச் தன்மை கொண்ட இரசாயன பொருள்களும் உள்ளன. இந்த செயற்கை கோள் பெப்ரவரி மாதம் இறுதியிலோ மார்ச் மாத தொடக்கத்திலோ பூமி மீது மோதும் அபாயம் உள்ளது. இந்த தகவலை வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசியல் தலைவர்கள் மற்றும் நிபுணர்களுடன் அவசர ஆலோசனை நடைபெற்றது. பூமியை நோக்கி வரும் செயற்கை கோளை நடுவானிலேயே ஏவுகணை செலுத்தி அழித்து விடலாமா என்றும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 1979 ஆம் ஆண்டு ஸ்கைலேப் என்ற 78 டன் எடை செயற்கை கோள் பெரும் பீதியை ஏற்படுத்தியதுடன் இந்திய பெருங்கடலில் விழுந்து நொறுங்கியது.

இதே போல ஏற்கனவே பல தடவை செயற்கை கோள்கள் பூமியில் விழுந் துள் ளதாலும் அதில் ஆபத்து ஏதும் ஏற்பட வில்லை என்றும் நிபுணர்கள் ஆறுதல் கூறியுள்ளன்ர்.

(அ-5)

# பாரம்பரிய பழக்க வழக்கங்களை கைவிடுவது மார்புப் புற்றுநோய்க்குக் காரணமா?
## ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் ஆய்வு

(லண்டன்)

பெண்களுக்கு மார்பக புற்று நோய் வருவதற்கு வசதி வாய்ப்பு முற்றும் மேற்கத்திய கலாசாரத்தை பின்பற்றுவது ஆகியவை காரணங்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியா, சீனா போன்ற வளரும் நாடுகளில் இது கடந்த பத்தாண்டுகளில் 20லிருந்து 30 சத வீதமாக அதிகரித்துள்ளது.

அதிகரித்து வரும் செல்வம், பாரம் பரிய பழக்க வழங்கங்களை கைவிட்டு மேற்கத்திய பாணியை பின்பற்றுவது ஆகியவை இந் நோய் உலகில் அதிகரித்து வருவதற்கான முக்கிய காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. அதிக உணவு உட்கொள்வது, சிறிய குடும்பம், தாமதமாக குழந்தை பெறுதல், எடை அதிகரித்தல் மற்றும் மதுபானம் குடித்தல் ஆகியவை பெண்களுக்கு மார்பக புற்று நோய் வருவதற்கு காரணம் என நிபுணர்கள் தெரிவித்தனர்.

ஐரோப்பா, அமெரிக்காவில் மார்பக புற்று நோய் கடந்த 1970 ஆம் ஆண்டுக்கு பின் 80 சத வீதமாக அதிகரித்துள்ளது. இந்நோய் பாதிப்புகள் முன்பு குறைவாக ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தற்போது இரண்டுமூன்று மடங்கு அதிகரித்து விட்டன.

கடந்தாண்டு உலகில் 10 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு இந் நோய் தாக்கியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஒக்ஸ்போர்டு பல்கலை புற்றுறோய் ஆராய்ச்சித் துறையை சேர்ந்த வலேரி பெரல் கூறுகையில், மேற்கத்திய கலாசாரத்தை மட்டுமே குறை கூறினால் இதற்கான முக்கிய காரணம் என்ன என்பதை அறிய முடியாமல் போய்விடும்.

பழைய காலத்தில் பெண்கள் ஆறு முதல் ஏழு வரை குழந்தை பெற்றனர். ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு ஆண்டு வரை பாலூட்டினர். குழந்தை பிரசவிக்கும் நேரத்திலும் பாலூட்டும் நேரத்திலும் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள் உயிருக்கு பாதுகாப்பு அளிக்கிறது என்றார். லியான்னில் உள்ள சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த பீட்டர் லியான் கூறுகையில்,

இளம் பெண்கள் மது குடிப்பது மிகுந்த கவலையளிக்கிறது. ஒவ்வொரு நாளும் அவர்கள் குடிக்கும் ஒரு யூனிட் அளவு மது அவர்கள் உயிர் வாழ்வதில் ஏழு சதவீதம் ஆபத்தை அதிகரிக்க செய்கிறது என்றார்.

(அ-5)

# காரசாரமாகச் சண்டை போடும் தம்பதிகளுக்கு ஆயுள் அதிகம்!

(நியூயோர்க்)

காரசாரமாக சண்டை போட்டு தங்கள் கோபத்தை வெளிப்படுத்தி விடும் தம்பதிகளுக்கு ஆயுள் அதிகம் என்று ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.

நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும் வாய்ச் சண்டை வீரர்களா? கவலையை விடுங்கள் உங்கள் இருவரது உடல் ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும் என்கிறது ஆய்வு.

அமெரிக்காவில் உள்ள மிக்சிகன் பல்கலைக் கழக ஆய்வில் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

தங்கள் கோபத்தை ,ஆத்திரத்தை தங்களுக்குள்ளே அடக்கிக்கொண்டு ஆகட்டும் பார்க்கலாம் என்று புழுங்கிக் கொண்டிருப்பவர்களை விரை வில் மரணம் தழுவிக்கொள்ளுமாம்.

கணவன் சண்டைபோடும் போது மனைவி பதிலுக்குப் பதில் கொடுக்காமல் கோபத்தை அடக்கிக்கொண்டாலும் சரி அல்லது மனைவி சண்டை போடும்போது கணவன் பதிலடி கொடுக்காமல் மனதின் உள்ளே பூட்டி வைத்துக்கொண்டாலும் சரி, உடல் நலன் பாதிக்கும் என்கிறது இந்த ஆய்வு.

மொத்தம் 192 தம்பதிகளிடம் 17 ஆண்டுகளாக ஆய்வு நடத்தப்பட்டது. கணவன், மனைவி இருவரும் தங்கள் கோபத்தை அப்போதே வெளிப்படுத்திவிடுவது முதல் வகை. இரண்டாவது வகை ஒருவரின் ஆத்திரமூட்டும் சொற்களை செயல்களை மற்றொருவர் மனத்துக்குள்ளே அடக்கிக் கொள்வது மூன்றாவது வகை.

கணவீன் மனைவி இருவருமே தங்கள் கோபத்தை மனத்துக்குள்ளே அடக்கிக் கொள்வது என வகை வகையாகப் பிரிந்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

தங்களுக்குள்ளே கோபத்தை, ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளாமல் அப்போதே வெளிப்படுத்தி பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்ளும் தம்பதியரே நீண்ட நாள் வாழ்கின்றனர் என்ற ஆய்வில் தெரியவந்துள்ளது.

கோபத்தை அவ்வப்போது வெளிப்படுத்தி வடிகால்தேடா விட்டால் உங்களுக்குப் பிரச் சினை தான் என்கிறார் பேராசிரியர் எர்னஸ்ட் கர்பர்க்.

(அ-5)

# நாட்டுப்புற நாயகர்கள்



(புதுடில்லி)

தேசிய நாட்டுப்புற நடனத் திருவிழா டில்லியில் வியாழன் தொடங்கியது. 6 நாட்கள் நடைபெறும் வண்ணமயமான விழாவை குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் தொடங்கி வைத்தார்.

டில்லியின் லோக்தரங்கில் நடைபெறும் நடனத் திருவிழாவில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நாட்டுப்புற நடனக் கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.

தொடக்க நாளான வியாழக் கிழமை பாரம்பரிய சின்னமாக மயிலிறகுகள் கோழிகள் சகிதம் முகத்தில் ஓவியம் தீட்டிக் கொண்டு பங்கேற்கும் கலைஞர்கள் இவர்கள்.

(அ-5,7)

# 'செவ்வாய் கிரகத்தில் தோன்றியது மனித உருவம் அல்ல' வெறும் பாறை என்கிறார் அமெரிக்க வானியல் நிபுணர்

(வாஷிங்டன்)

செவ்வாய் கிரகத்தில் தோன்றியது மனித உரு வம் அல்ல என்றும் அது வெறும் பாறை என்றும் அமெரிக்க வானியல் நிபுணர் ஒருவர் விளக்கம் அளித்துள்ளார்.

செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருக்கிறதா? அங்கு உயிரினம் வாழ முடியுமா? என்று தொடர்ந்து ஆராய்ச்சி நடந்து வருகிறது. இது பற்றிய உண்மைகளை அறிவதற்காக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாசா' ஒரு விண்கலத்தை செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பி வைத்தது.

'ஸ்பிரிட்' என்ற அந்த விண்கலம் கடந்த 2004ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதி செவ்வாய்கிரகத்தை அடைந்தது. கடந்த 4 ஆண்டுகளாக அந்த விண்கலம் செய்வாய் கிரகத்தை சுற்றி வந்து தகவல்களை திரட்டி அனுப்பி வருகிறது. சமீபத்தில் செவ்வாய் கிரகத்தின் நிலப்பரப்பை படம் பிடித்து அனுப்பி வைத்தது.

அதில் செவ்வாய் கிரக நிலப்பரப்பில் ஒரு மனிதன் உட்கார்ந்திருப்பது போன்ற தோற்றம் காணப்பட்டது. இதனால் செவ்வாய் கிரகத்தில் மனிதன் உயிர் வாழ்வதாக உலகம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது.

அந்த உருவம் மேரியின் உருவம் என்று மேலை நாடுகளில் ஒரு தரப்பினர் கூறினர். இதனால் மேலும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் இந்த பரபரப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அது வெறும் பாறை தான் என்று பில் பிளைட் என்ற அமெரிக்க வானியல் நிபுணர் விளக்கம் அளித்துள்ளார். அது மாயத்தோற்றம் என்று அவர் கூறுகிறார். இவர் அமெரிக்காவில் உள்ள வெர்ஜினியா பல்கலைக் கழகத்தில் வானியல் துறையில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர். நாசாவில் பணியாற்றியுள்ளார். அமெரிக்காவில் உள்ள சோனாமா பல்கலைக் கழகத்தில் வானியல் துறை பேராசிரியராக பணியாற்றியுள்ளார்.

(அ-5)

SPECIAL COLLECTION



# தொண்டர் ஆசிரியர்களுக்கு அவசர கலந்துரையாடல்

நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக உள்வாங்குதல் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும்.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தொண்டர் ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் பற்றி ஆராயப்படவுள்ளதால் சகலரையும் உரிய ஆவணங்களுடன் சமுகந்தருமாறும் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# கோழி இறைச்சியின் விலையில் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் இறைச்சிக்கான கோழிவளர்ப்பு அதிகரித்துள்ளதால் இறைச்சியின் விலையும் குறைந்துள்ளது. முன்பு 1000ரூபாவில் இருந்து 1200 ரூபாவரை விற்பனையான ஒரு கிலோ இறைச்சி தற்பொழுது 350 ரூபாவில் இருந்து 400 ரூபாவரை விற்பனையாகிறது.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கால நிலை காரணமாக மக்கள் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினை தலைதூக்கியுள்ளது.

இதனால் அதிகமானவர்கள் இறைச்சிக் கோழி வளர்ப்பதில் ஈடுபட் டுள்ளார்கள். எங்கு பார்த்தாலும் சிறு சிறு கோழிப் பண்ணைகள் இருப்பதால் இறைச்சியின் விலையும் வெகுவாக குறைந்துள்ளது.

பல மாதங்களுக்கு முன் 1000 ரூபாவில் இருந்து 1200 ரூபாவரை விற்பனையான ஒரு கிலோ இறைச்சி தற்பொழுது 350 ரூபாவில் இருந்து 400 ரூபாவரை விற்பனையாகிறது. மீனுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டாலும் விலை அதிகரிப்பாலும் மக்கள் தற்பொழுது கோழி இறைச்சி வாங்குவதில் நாட்டம் காட்டுகின்றனர்.

இதேவேளை கோழி முட்டையின் விலையும் குறைந்துவிட்டது. 20 ரூபாவில் இருந்து 25 ரூபா வரை விற்பனையான கோழிமுட்டை 15 ரூபாவில் இருந்து 18 ரூபாவரை விற்பனையாகிறது. இவற்றின் விலைகள் குறைந்தது மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (அ-5)

# விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் விவசாயத்தில் இரு வருட டிப்ளேமா பயிற்சி நெறிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை திருநெல்வேலி, பலாலி வீதியிலுள்ள் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகத்தில் 30 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பரீட்சாத்திகளின் விபரம் கீழ் வருமாறு,

செல்வி எஸ்.சிந்துஜா - 64, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், செல்வி எம்.தனுஜா- மே/பா எஸ்.மதிமுகன், கோப்பாய் மத்தி கோப்பாய், செல்வி எஸ்.நிவேதிதா - பிள்ளையார் கோவில் வீதி, தாவடி, கொக்குவில்.

செல்வி ஏ.தர்சிகா - 71/25. புங்கன்குளம், வீதி யாழ்ப்பாணம், செல்வி ரீ.சுமங்கலி -அராலி மத்தி, வட்டுக்கோட்டை, செல்வி என்.தீபா - கருணாலாயம், தபாற்கந்தோர் வீதி. சாவகச்சேரி.

செல்வி எஸ்.திருமகள் - சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம், செல்வி கே.வாசுகி - கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய், செல்வி ஜீ.ஜென்னி-358, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், எஸ்.றமேஸ் - மணவாளயம், மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், என்.துளிசிதன் - முருகன் கோவிலடி, புலோலி வடமேற்கு, புலோலி.

ரீ.ஐங்கரன் - வேலன், கரவெட்டி மேற்கு கரவெட்டி, வி.ஜெகன் - 102, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், வி.பகீரதன் - கைதடி தெற்கு, கைதடி, டி.குருராஜ் - 1ஆம் மைல் கல், கல்வயல் சர்வகச்சேரி.

மற்றைய மாவட்டங்களில் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்ற பரீட்சார்த்திகளும் இவ் நேர்முகப்பரீட்சையில் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களிற்கு பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளு மாறு வேண்டப்படுகின்றீர்கள். (அ)

# தமிழ் மொழித் தினம் - 2008 மாவட்ட மட்ட போட்டி முடிபுகள்

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான மாவட்ட நிலைத் தமிழ்த்தினப் போட்டிகள் சனிக்கிழமை யாழ்.இந்துக்கல்லூரியிலும், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையிலும் நடைபெற்றன.

இதேவேளை தமிழ் அறிவு வினாவிடைப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அத்துடன் எழுத்துப் போட்டி முடிவுகள் வெளியாகவில்லை.நேற்று முன்தினம் நடைபெற்ற ஆக்கத்திறன் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**ஆக்கத்திறன் வெளிப்பாடு** - *பிரிவு 1*

1ஆம் இடம்:- பா.வினோஜன் - (கரவவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்) ,2ஆம் இடம்:- யோ.பகீரதி - (கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்), 3ஆம் இடம்:- தி.ஹேம மாலினி - (மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்).

**இசையும் அசைவும்**

*பிரிவு -1*

1ஆம் இடம்:- நா.ரம்மியா (ஞானசாரியார் கல் லூரி), 2ஆம் இடம்:- இ.கார்த்திகாயினி - (சுழிபுரம் ஐக்கிய சன்மார்க்க வித்தி,3 ஆம் இடம்:- ந.பவதாரணி -(நாவற்குழி மகாவித்தி.).

**பேச்சு**

*பிரிவு 1*

1ஆம் இடம்:- பா.சௌமியா- (யா/வதிரி இருதயக் கல்லூரி), 2ஆம் இடம்:- ம.திரிஷிகா - (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), 3ஆம் இடம்:- வி.கார்த்திகாயினி - (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி.).

*பிரிவு -2*

1ஆம் இடம்:- இ.சஞ்சீவ் - (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி.), 2ஆம் இடம்:- சி.நவநீதா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), 3ஆம் இடம்:- ஆ.ஹரிசங்கர் -(யாழ்.இந்துக் கல்லூரி).

*பிரிவு 3*

1ஆம் இடம்:- அ.உமாகரன்-(யாழ்.இந்துக் கல்லூரி), 2ஆம் இடம்:- சி.கயானா- (யா/மகாஜனாக்கல்லூரி), 3ஆம் இடம்:- லோ.லோஜிதா-(யா/புங்குடுதீவு சுப்பிரமணியம் வித்தி.).

*பிரிவு 4*

1ஆம் இடம்:- கு.திருமாறன்- (யா/மகா ஜனாக் கல்லூரி),2ஆம் இடம்:- கி.சிவசுதன்- (ஹாட்லிக் கல்லூரி), 3ஆம் இடம்:- வ.தயாளன் -(யா/கொட்டடி நமசியவாயம் வித்தி.)

*பிரிவு 5*

1ஆம் இடம்:- ச.கோபிநாத்- (யா/மத்திய கல்லூரி), 2ஆம் இடம்:- ஆ.அனுஷியா- (யா/மகா ஜனா கல்லூரி), 3ஆம் இடம்:- சி.சோபிதன்- (சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி.)

**இசை தனி**

*பிரிவு 2*

1ஆம் இடம்:- ச.நிஷா -(யா/இராமநாதன் கல்லூரி), 2ஆம் இடம்:- போ.டினோஜன்- (யாழ். இந்துக் கல்லூரி),3ஆம் இடம்:-த.தர்சிகா- (யா/ சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி)

*பிரிவு 3*

1ஆம் இடம்:- பா.பானுப்பிரியா - (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), 2ஆம் இடம்:-ஜெ.லோஷனா - (யா/கைதடி நாவற்குழி அ.த.க.), 3ஆம் இடம்:- மா.தர்ஷியா - (யா/வட்டு இந்து கல்லூரி).

*பிரிவு 4*

1ஆம் இடம்:- சு.தஷாங்கன் - (யா/தெல்லிப் பழை யூனியன் கல்லூரி), 2ஆம் இடம்:-ச.கிருத்திகா- (வேம்படி மகளிர் கல்லூரி),3ஆம் இடம்:- க.கோபலகிருஷ்ணன் - (யாழ்ற்றன் கல்லூரி).

**நடனம் தனி**

*பிரிவு 1*

1ஆம் இடம்:- ந.அபிராமி - (யா/ மகாஜனாக் கல்லூரி),2ஆம் இடம்:-மோ.சுபேஸ்கா - (யா/ஜோன் பொஸ்கோ), 3ஆம் இடம்:-ஸ்ரீ.சுஜீபா- (யா/ ஞான சாரியார் கல்லூரி).

*பிரிவு 2*

1ஆம் இடம்:- க.கௌதமன்- (யாழ். மத்திய கல்லூரி),2ஆம் இடம்:- ஜெ.சரணியா- (சாவகச்சேரி இந்து கல்லூரி), 3ஆம் இடம்:- ந.அபிராமி- (யா/விக்டோரியா கல்லூரி).

*பிரிவு 3*

1ஆம் இடம்:- யோ.மயூரதி - (சாவகச்சேரி இந்து கல்லூரி),2ஆம் இடம்:- த.நிஷானி - (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்),3ஆம் இடம்:- சி.நிலோ ஜினி- (சங்கானை சிப்பிரகாசம்).

*பிரிவு -4*

சி.பிரவீனா- (யாழ்.இந்து மகளிர் கல்லூரி ), அப்துல் ஜாபர் சப்திகா - (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),க.இந்திகா- (சாவகச்சேரி இந்து கல்லூரி).

*பிரிவு 5*

1ஆம் இடம்:- பா.தர்ஷனா-(வேம்படி மகளிர் கல்லூரி), 2ஆம் இடம்:-பா.அபிஷாரிகா - (மகாஜனாக்கல்லூரி), 3ஆம் இடம்:- பா.தர்மினி- (வட.இந்து மகளிர் கல்லூரி).

**பாவோதல்**

*பிரிவு 1*

1ஆம் இடம்:- வ.நிஷோதன்-(யா.ஜோன் பொஸ்கோ), 2ஆம் இடம்:- வி.ஜெயசுதா- (கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்), 3ஆம் இடம்: ஆ.சிந்துஜா- (மல்லாகம் விசாலாட்சி வித்தி.).

*பிரிவு 2*

1ஆம் இடம்:- ஜெ.யதுஷிகன்- (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), 2ஆம் இடம்:-கி.சாயிரூபன்- (நெல்லியடி மத்தி ம.வி.), 3ஆம் இடம்:- வி.துவாரகா - (யூனியன் கல்லூரி).

*பிரிவு 3*

1ஆம் இடம்:- செ.அருண்ராஜ்- (புனித அந்தோனியார் கல்லூரி), 2ஆம் இடம்:- சி.ருகல்யா- (யூனியன் கல்லூரி),3ஆம் இடம்:- இ.சங்கீதா- (கொடிகாமம் அ.த.க.).

*பிரிவு 4*

1ஆம் இடம்:- ம.துளசி - (யாழ்ப்பாண கல்லூரி),2ஆம் இடம்:- சி.செய்விஜமிலா - கனகரத்தினம் ம.வி),3ஆம் இடம்:-சி.பவித்திரா - (மீசாலை வீரசிங்கம்)

*பிரிவு 5*

1ஆம் இடம்:- ஸ்ரீ.காயத்திரி - (யா.வேம்படி மகளிர் கல்லூரி), 2ஆம் இடம்:-து.தமயந்தி- (வட இந்து மகளிர் கல்லூரி), 3ஆம் இடம்:- மு.சௌமியா - (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**வாசிப்பு**

*பிரிவு 1*

1ஆம் இடம்:- ம.துஷிதா-(கரவெட்டி மாணிக்க வாசகர்),2ஆம் இடம்:- க.விதுரா-(கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), 3ஆம் இடம்:- ப.கோபிதா-.(கைதடி முத்து குமாரசாமி வித்தி.).

*பிரிவு 2*

1ஆம் இடம்:- உ.குணசுசி -(கொடிகாமம் திருநாவுக்கரசு), 2ஆம் இடம்:-ம.ஜோய் காருணியா - (சுண்டுக்குளி மகளிர்),3ஆம் இடம்:-செ.சிந்துராணி- (வட இந்து மகளிர்).

**இசை குழு**

*பிரிவு 1*

1ஆம் இடம்:- ஹாட்லி கல்லூரி, 2ஆம் இடம்:-கொக்குவில் இந்துக்கல்லூரி, 3ஆம் இடம்:-சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

**இசைக்குழு - 2**

1ஆம் இடம்:-சாவகச்சேரி இந்து, 2ஆம் இடம்:- மானிப்பாய் மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்:- வேம்படி மகளிர் கல்லூரி.

**நடனம் குழு**

*பிரிவு 1*

1ஆம் இடம்:-யா/ மத்திய கல்லூரி, 2ஆம் இடம்:- கற்கோவளம் மெ.மி.த.க.,3ஆம் இடம்:- இராமநாதன் கல்லூரி.

**நாட்டிய நாடகம்**

*பிரிவு 2*

1ஆம் இடம்:- இராமநாதன்,2ஆம் இடம்:- கனகரத்தினம்,3ஆம் இடம்:- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**நாடகம்**

1ஆம் இடம்:-யா.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 2ஆம் இடம்:- இந்துக்கல்லூரி, 3ஆம் இடம்:-வேலணை மத்திய கல்லூரி.

**கட்டுரை வரைதல்**

*பிரிவு 2*

1ஆம் இடம்:- த.கோகுலன் -ஹாட்லி கல்லூரி, 2ஆம் இடம்:- சி.ஜீவனா -அத்தியார் இந்து, 3ஆம் இடம்:- செ.கீர்த்திகா- சங்கானை சிவப் பிரகாசம்.

**கட்டுரை வரைதல்**

1ஆம் இடம்:- ஸ்ரீ.கோகிலா- தும்பளை சிவப்பிரகாசம், 2ஆம் இடம்:-ம.மதுஷா- கரம்பன் சிறியப்புண்ர ம.வி. , 3ஆம் இடம்:-சி.துளஷிகா - சங்கானை சிவப்பிரகாசம்.

**வில்லுப்பாட்டு**

1ஆம் இடம்:- BB- யாழ்.யூனியன் கல் லூரி, 2ஆம் இடம்:-EE - யாழ்.புனித அந்தோனியார் கல்லூரி, 3ஆம் இடம்:- AA - யாழ்.இந்துக் கல்லூரி.

**ஆக்கம் எழுத்து**

*பிரிவு 1*

1ஆம் இடம்:- கு.கௌசிகா -கொடிகாமம் திருநாவுக்கரசு, 2ஆம் இடம்:- த.ஜனித்தா - ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்கம், 3ஆம் இடம்:- கு.தனுஷியா நெல்லியடி மெ.மி.த.க.

**முஸ்லிம் நிகழ்ச்சி**

*பிரிவு திறந்த போட்டி*

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி. (ந-10)

# மகாத்மா காந்தியின் 60ஆவது நினைவு தினம்

(பருத்தித்துறை)

மகாத்மா காந்தியின் 60ஆவது நினைவு தினத்தையொட்டி 30ஆம் திகதி காலை 10 மணிக்குப் பருத்தித்துறைப் பேரூந்து நிலையத்திலுள்ள காந்தி சிலைக்கும், யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாகவுள்ள காந்தி சிலைக்கும் மாலை அணிதலும் அதனைத் தொடர்ந்து 171, 1ஆம் குறுக்குத்தெருவிலுள்ள பணி மனையில் பொதுக்கூட்டமும் நடைபெறுமென அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தலைவர் சோ.க. தம்பிப்பிள்ளை அறிவித்துள்ளார். (அ-7)

# அலுவலகம் இடம் மாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை அலுவலகம் பருத்தித்துறை ஆத்தியடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள தனியார் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுசெயற்பட்டுவருவதாக நகரசபைச்செயலாளர் அ.அ.நடராஜா அறிவித்துள்ளார். (அ-52)

# சாராயம் விற்றவருக்கு தண்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துன்னாலைய[illegible] சட்ட விரோத வடிசாராய விற்பனையில் ஈடுபட்ட நபரொருவர் மூன்றாவது முறையாகவும் பருத்தித்துறை மதுவரிப் பரிசோதகர்களிடம் அகப்பட்டுக் கொண்டார்.

இவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். 1 இலட்சத்து75ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிபதி எதிரியை 5 வருட நன்னடத்தைப் பிணையில் இருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். சான்றுப் பொருட்கள் அழிக்கப்பட்டன. (அ-52)

# இணையப் பணிமனை இடமாற்றம்

(ஊர்காவற்றுறை)

வடபகுதி தனியார் சிற்றூர்தி சேவை சங்க இணைய நிர்வாகப் பணிமனை தற்பொழுது (கச்சேரி இல 11/2 முதலாம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-72)

# ஒருங்கிணைப்புக்குழு மாதாந்த கூட்டம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு மாதாந்த கூட்டம் நாளை பகல் 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை மகாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் க.-ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-72)

# தரம் 11வரை வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான அனுமதி

(யாழ்ப்பாணம்)

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையில் இவ் வருட ஆரம்பம் தொடக்கம் தரம் 11 வரை வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இப் பாடசாலையில் கடந்த ஆண்டுவரை தரம் 1 தொடக்கம் தரம் 9வரை வகுப்புக்கள் நடை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)


# ரிக்கி பொன்டிங், மைக்கல் கிளார்க் சதம்; ஆஸி. அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை

## 4ஆவது டெஸ்ட் சமனிலையை நோக்கி

(அடிலெய்ட்)

அடிலெய்ட் 4ஆவது டெஸ்ட் போட்டியில் ரிக்கிப்பொன்டிங்-கிளார் சதம் விளாச அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 562 ஓட்டங்களைப் பெற்றது. இதனால் முதல் இன்னிங்ஸில் இந்திய அணியை 37 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இத் தொடரில் முதல் மூன்று போட்டியில் இரண்டில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 2.1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.



தொடரின் தீர்க்கமான 4ஆவதும் இறுதியுமான போட்டி கடந்த 24ஆம் திகதி முதல் அடிலெய்டில் நடைபெற்று வருகிறது. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 526 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சச்சின் டெண்டுல்கர் 153 ஓட்டங்களையும் அணித்தலைவர் கும்ளே 87 ஓட்டங்களையும் செவாக், ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா 63 ஓட்டங்களை



யும் மற்றும் லக்ஸ்மன் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணிசார்பாக ஜோன்ஸன் 4 விக்கெற்றுக்களையும் பிரெட்லீ 3 விக்கெற்றுக்களையும் மற்றும் ஹொக், சைமண்ட்ஸ், மைக்கல் கிளார் ஆகியோர் தலா ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.


பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் 3 விக்கெற்றுக்களையுமிழந்து 322 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். இதில் ஹைடன் 103 ஓட்டங்களையும் ஜக்கீஸ் 60 ஓட்டங்களையும் பெற்றதுடன் களத்தில் ரிக்கிப் பொன்டிங் 79 ஓட்டங்களுடனும் மைக்கல் கிளார் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலிருந்தனர்.

போட்டியின் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணியின் ரிக்கிப் பொன்டிங் மற்றும் மைக்கல் கிளார் ஆகி யோர் பொறுப்புடன் ஆடினர். சிறப்பாக ஆடிய கிளார் அரைச்சதத்தைக் கடந்தார்.



மறுமுனையில் அணித்தலைவர் ரிக்கிப் பொன்டிங் டெஸ்ட் கிறிக்கெற்றில் தனது 34 ஆவது சதத்தைப் பெற்று அதிகச் சதம் பெற்றவர் களில் இந்தியாவின் சுனில் கவாஸ்கர் (34) சமன் செய்து இரண்டாவது இடத்தைப் பிடித்தார். சச்சின் டெண்டுல்கர் (39) முதலாவது இடத்திலுள்ளார்.

இருவரின் இணைப்பாட்டத்தை பிரிக்க இந்திய அணித்தலைவர் கும்ளே பந்து வீச்சாளர்



களை மாற்றியும் களத்தடுப் பில் பல வியூகங்களை வகுத் தும் முடியவில்லை.

இறுதியில் அதிரடியாக ஆடிய மைக்கல் கிளார் தனது சதத்தை கடக்க மறுமுனையில் சிறப்பாக ஆடிய அணித் தலை வர் ரிக்கிப் பொன்டிங், 140 ஓட் டங்களுடன் செவாக்கின் பந்தில் "போல்ட்" முறையில் ஆட்டமி ழந்தார். 4ஆவது விக்கெற்றுக் காக பொன்டிங், கிளார் 210 ஓட் டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து களமிறங்கிய சைமண்ட்ஸ் நிதானமாக ஆட ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய மைக்கல் கிளார்க் 118 ஓட்டங்களை எடுத்த போது இஷாந்த் சர்மாவின் பந்து வீச்சில் லக்ஸ்மனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து தனது இறுதி டெஸ்டில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கில்கிறிஸ்டுக்கு மைதான அரங்கில் சூழ்ந்திருந்த ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்தும் இந்திய அணி வீரர்களின் கரகோசங்களுடனும் களமிறங்கிய கில்கிறிஸ்ட் 14 ஓட்டங்களை மாத்திரம் பெற்று பதானின் பந்து வீச்சில் செவாக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து ரசிகர்களிற்கு கையசைத்து அரங்கு திரும்பினார்.

அடுத்து வந்த பிரெட் ஹொக் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். அவுஸ்திரேலிய அணி 527 ஓட்டங்களை எடுத்து முன்னிலை பெற்ற போது சைமண்ட்ஸ் 30 ஓட்டங்களுடன் இஷாந்த் சர்மாவின் பந்தில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த பிரெட்லீ 1 ஓட்டத்துடன் பதானின் பந்தில் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ஜோன்ஸ் 13 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் பந்தில் சர்மாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க இறுதி விக்கெற்றுக்காக களமிறங்கிய ஸ்ரூவட் கிளார்க் 3 ஓட்டங்களுடன் செவாக்கின் பந்தில் "போல்ட்" முறையில் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 563 ஓட்டங்களைப் பெற்றது.

மறுமுனையில் நிதானமாகிய ஹொக் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தார். பந்து வீச்சில் பதான், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 3 விக்கெற்றுக்களையும் செவாக் 2 விக்கெற்றையும் மற்றும் கும்ளே, ஹர்பஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 37 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி இந்தியாவுக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சி அளித்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய பதான் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஜோன்ஸனின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டிராவிட் செவாக்குடன் நிதானமாக துடுப்பெடுத்தாடினார். இறுதியில் நேற்றைய 4ஆம் நாள் ஆட்ட முடிபில் இந்திய அணி ஒரு விக்கெற் இழப்புக்கு 45 ஓட்டங்களையும் பெற்றிருந்தது. ஆடுகளத்தில் செவாக் 31 ஓட்டங்களுடனும் டிராவிட் 11 ஓட்டங்கடனும் ஆட்டமிழக்காமலிருந்தனர்.

இறுதி நாளான இன்று இரண்டாம் இன்னிங்ஸில் 8 ஓட்டங்களே முன்னிலை பெற்று துடுப்பெடுத்தாடி இவரும் இந்திய அணி இன்றும் நீண்ட நேரம் துடுப்பெடுத்தாடி வேண்டியிருப்பதால் போட்டி சமநிலையிலே முடிபுறுமென கிரிக்கெற் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடரில் அவுஸ்திரேலிய அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலை வகிப்பதால் இப் போட்டியை சமனிலையில் முடித்து தொடரை வெல்வதே அவுஸ்திரேலிய அணி குறிக்கோளாகவுள்ளது. (5)

## சிம்பாவே போராடித் தோல்வி; பாகிஸ்தான் தொடரை வென்றது

(முல்தான்)

சயிட் அப்ரிடியின் அதிரடியில் மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றி பெற்று பாகிஸ்தான் அணி தொடரை 3:0 என்ற கணக்கில் வென்றது. இறுதிவரை போராடிய சிம்பாவே அணி 37 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாவே அணி ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடிவருகின்றது. முதல் 2போட்டிகளிலும் பாகிஸ்தான் வெற்றிபெற்று தொடரில் 2:0என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இந்நிலையில் 3ஆவதுபோட்டி நேற்று முல்தானில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானி அணி ஆரம்பத்தில் தடுமாறினாலும் அப்ரிடியின் அதிரடியால் 50ஓவர்கள் நிறைவில் 9விக்கட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சயிட் அப்ரிடி 52 பந்துகளில் (6சிக்ஸர்கள், 2பவுண்டரிகள் உட்பட) 85ஓட்டங்களையும் மிஸ்பா உல்ஹக் 44, யம்ஷீட் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் முபாரிவா.4 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

### அப்ரிடி அதிரடி

பதிலுக்கு 50 ஓவர்களில் 273 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி இறுதிவரை போராடி 50 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 37 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

இதில் வில்லியம்ஸ் 71 ஓட்டங்களையும் டெய்லர் 55 ஓட்டங்களையும் சிக்கும்புரா ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தான்வீர், மாலிக் ஆகியோர் தலா 2விக்கட்டுக்களை வீழ்த்தினர்.

**அப்ரிடி சாதனை**

நேற்றைய போட்டியில் 6சிக்ஸர்கள் விளாசிய அப்ரிடி ஒருநாள் போட்டியில் அதிக சிக்ஸர்களை அடித்த இலங்கை வீரர் சனத் ஜெயசூர்யாவின் 235 சிக்ஸர்கள் என்ற சாதனையை சமன் செய்தார்.

அப்ரிடி தனது 252 ஒரு நாள் போட்டியில் இந்த சாதனையை சமன் செய்தார். ஜெயசூர்யா 403 ஒருநாள்போட்டியில் விளையாடி 235 சிக்ஸர்களைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## லக்ஸ்மனால் ஓய்வு-கில்கிறிஸ்ட்

(அடிலெய்ட்)

லன்க்ஸ்மன் கொடுத்த பிடியை தவறவிட்டபோதே கிரிக்கெற் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் முடிபை எடுத்ததாக அடம் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் துணை தலைவரும் விக்கெற் காப்பாளருமான அடம் கில்கிறிஸ்ட் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். அவரது இம் முடிபு வியப்பை ஏற்படுத்தியுள்ளதாக கில்கிறிஸ்ட் மேலும் ஓராண்டுக்காவது தொடர்ந்து விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் ஓய்வுபெறும் முடிபை அறிவித்தது பற்றி கில்கிறிஸ்ட் கூறியிருப்பதாவது, லக்ஸ்மன் கொடுத்த பிடியை தவறவிட்ட போது தான் ஓய்வுபெற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. டெஸ்ட் கிரிக்கெற் போட்டிக்கு தேவையான கவனம் என்னிடம் இல்லை என்பதை அப்போது உணர்ந்தேன். எனவே ஓய்வுபெற இதுவே சரியான நேரம் என்பதை தீர்மானித்தேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (5)

## பூபதி -சானியா ஜோடி தோல்வி

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டி கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மகேஷ் பூபதி -சானியா மிர்சா ஜோடி பங்கேற்றது. இந்த ஜோடியினர் அரை இறுதி போட்டியில் டெசி (பிரான்சு) ஆண்டிராம் (இஸ்ரேல்) ஜோடியை வீழ்த்தி இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது. இதன் இறுதி போட்டி நேற்று நடந்தது. இதில் இந்த ஜோடி டியன்சுன் (சீனா) ஜிமோன்ஜிக் (செர்பியா) ஜோடியை சந்தித்தது. முதல் செட்டில் ஜிமோன்ஜிக் ஜோடி 7-6 (4) என்ற கணக்கில் கைப்பற்றியது. அடுத்த செட்டையும் 6-4 என்ற கணக்கில் வென்றது.



இதன்மூலம் அந்த ஜோடி 7-6, 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் பெற்றது. மகேஷ்பூபதி - சானியா ஜோடிக்கு 2ஆவது இடம் கிடைத்தது. (5)

SPECIAL COLLECTION



ஒரு மனிதனுடைய சொல்–செயல் அவனுடைய; பெருமை அல்லது சிறுமையின் உரைகல்.

–இந்தியா

வலம்புரி

## போர் ஆரம்பித்துவிட்டால் 13-வது திருத்தச் சட்டம் எதற்கு?

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர் நடத்துவதற்கு தேவையான ஆயுதங்கள் அனைத்தும் கொள்வனவு செய்யப்பட்டு விட்டதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதற்கு மேலாக படை நடவடிக்கைக்கான ஆட்பலமும் தாராளம் என்றும்,வன்னியில் விடுதலைப் புலிகளின் பகுதிகளை மீட்பதற்கான இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து விட்டதாகவும் கோத்தபாய கூறியிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

13–வது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறிவரும் அதேவேளை, படை நடவடிக்கை ஆரம்பித்து விட்டதாக் கோத்தபாய கூறுவது அரசின் முரண்பட்ட செயலைக் காட்டுவதாகும்.

அதாவது சர்வதேச சமூகத்தை சமாளிப்பதற்காக 13–வது திருத்தச் சட்டமூலத்தை நடை முறைப்படுத்துவதான அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதே நேரம் தமிழ் மக்களின் பிரதேசங்களில் யுத்தத்தை ஆரம்பித்து பேரினவாத சிந்தனைக்கு தீனிபோடுவது அரசின் உள்நோக்கமாகவுள்ளது.

13–வது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டிவிட முடியுமென்றால் போரை நடத்த வேண்டிய தேவை இருக்காது. அல்லது போரை நடத்துவதெனில் 13–வது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்த வேண்டிய அவசியமும் இருக்கமாட்டாது.

ஆக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசு முன்னெடுக்கின்ற நடவடிக்கைகள் முன்னுக்குப் பின் முரண்பாடாக இருப்பதுடன் அதனால் நாட்டில் பேரழிவுகள் ஏற்படும் அபாயமும் உண்டு.

இனப்பிரச்சினைக்கான தீர்வென்பது இலங்கை மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ்வதற்கும்,உரிமை மறுக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழினம் இலங்கையில் பெரும்பான்மை இனத்தவர்கள் அனுபவிக்கும் உரிமைகளை பெற்றுக்கொள்ளவும் வழிசமைப்பதாக அமையவேண்டும்.

இதைவிடுத்து இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்த பின்னரும், போர் நடக்குமாயின் அந்த தீர்வினால் ஏதேனும் நன்மை உண்டா என்பது பற்றி ஆட்சியாளர்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்ப்பது நன்று.

அதேநேரம் இனப்பிரச்சினைக்கு தீர்வு வைத்த பின்னரும் மோதல்கள் இடம்பெறுவது–குண்டு வெடிப்பது–சூட்டுக்கு இலக்காகி மக்கள் பலியாகுவது என அனைத்து பேரவலங்களும் நின்றுபோக வேண்டும். அவ்வாறானதோர் சூழல் ஏற்படுவதற்கு போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் சிந்தித்து, ஓர் பொதுவான உடன்பாட்டிற்கு வந்தாக வேண்டும்.

இதைவிடுத்து போரில் ஈடுபடும் இருதரப்பில் ஒரு தரப்பு இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இணக்கம் காணவில்லையாயினும் பிரச்சினை தீரமாட்டாது.

எனவே பிரச்சினையைத் தீர்ப்பதென்பது தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதுடன் நின்றுவிடுவதில்லை.

மாறாக, அது போரை நிறுத்தி நிரந்தர அமைதியை –சமாதானத்தை கொண்டுவருவதாக இருக்க வேண்டும்.

# இலங்கை சிறையில் அடைக்கப்பட்ட இந்திய மீனவர் விடுதலைக்காக இராமேஸ்வரத்தில் போராட்டம்

(இராமேஸ்வரம்)

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் மீன்பிடி தொழிலே முக்கியமானதாக உள்ளது. இங்கு 2ஆயிரத்து 500 விசைப் படகுகளும் ஆயிரத்து 500 நாட்டுப்படகுகளும் உள்ளன. தினந்தோறும் 800க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் கடலுக்கு சென்று வருகின்றன.

இதனால் இராமேஸ்வரம் கடற்கரை எப்போதும் களைகட்டி இருக்கும். இதனிடையே வெள்ளிக்கிழமை முதல் மீனவர்கள் போராட்டத்தினை தொடங்கியுள்ளனர்.

அதாவது இலங்கை கடற்படையினர் பிடித்து சென்ற மீனவர்களை விடுவிக்க வேண்டும். கச்சதீவு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி தமிழக மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும்.

இலங்கை கடற் படை கண்ணிவெடிகளை அகற்ற வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையறையற்ற போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக இராமேஸ்வரம் ஆர்.டி.யோ. நடத்திய பேச்சுவார்த்தையில் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. மீனவர்களின் தொடர் வேலைநிறுத்தம் காரணமாக படகுகள் அனைத்தும் கடற்கரையில் ஓய்வு எடுக்கின்றன.

இதனால் கடற்கரை வெறிச்சோடி காணப்படுகிறது. மீன்பிடி நாட்களில் ஒரு படகுக்கு தலா 20கிலோ இறால் மீன்கள் கிடைக்கும். இவை தவிர நண்டு , கணவாய் மற்றும் பல்வேறு மீன்களும் கிடைக்கும். இறால்கள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதற்காக இராமேஸ்வரத்தில் 5ற்கும் மேற்பட்ட ஏற்றுமதி நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

கடந்த 3 நாட்களாக மீன்கள் வரத்து இல்லாததல் ஏற்றுமதி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இதன்காரணமாக ரூபா 6 கோடிக்கும் மேல் அந்நிய செலாவனி இழப்பு ஏற்பட்டுள்ளது. படகுகள் வேலை நிறுத்தத்தால் எப்போதும் பரபரப்பாக காணப்படும் கடற்கரை களை இழந்து காணப்படுகிறது.

மீன்பிடி தொழிலைச் சார்ந்துள்ள ஐஸ் கம்பனிகள் லேத்பட்டறைகள் மூடப்பட்டுள்ளன. இதனால்.இராமேஸ்வரத்தில் பொருளாதாரம் முடங்கியுள்ளதால் மீனவர்கள் வருமானம் இன்றி தவிக்கின்றனர். இதனிடையே இலங்கை சிறையில் அடைக்கப்பட்ட தமிழக மீனவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என அமைச்சர் சுப.தங்கவேலன் தெரிவித்துள்ளார்.

ஒரு வாரத்திற்கு முன்பாக 3 படகுகளில் சென்ற 12 மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டனர். ஆனால் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இதனால் இராமேஸ்வரம் மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 3 நாட்களாக கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை.

மீனவர்களின் போராட்டத்தை தொடர்ந்து இலங்கை சிறையில் அடைக் கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய தமிழக அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமென அமைச்சர் சுப.தங்கவேலன் தெரிவித்துள்ளார்.

(அ-5)

# வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் பெரும்பிரச்சினை - பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது என்ற அரசாங்கத்தின் முடிவைத் தொடர்ந்து அங்கு பெரும் பாதுகாப்புப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன .

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது , கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் தலா இரு பொலிஸார் 24 மணி நேரமும் காவலில் ஈடுபடுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை காலமும் இல்லாதவாறு மிக அதிகளவிலான 834 உறுப்பினர்கள் கிழக்கில் வேட்புமனுக்களை சமர்ப்பித்ததனைத் தொடர்ந்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் பெரும் நெருக் கடிகள் தோன்றியுள்ளன. வேட்பாளர்களுக்கு சுழற்சி முறையில் பாதுகாப்பு வழங்குவதற்கு 3ஆயிரத்து 336 பொலிஸார் தேவை. ஆனால் இந்த தேவைகளை நிறைவு செய்வதற்கு தேவையான பொலிஸார் கிழக்கில் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக வேட்பாளர்களுடனும் தேர்தல் திணைக்களத்துடனும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்காரா தெரிவித்துள்ளார். (அ–5)

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலில் இந்தியாவின் இராணுவப் பங்கு ஏதுமில்லை

## அமெரிக்காவுக்கான இலங்கை. தூதர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

இலங்கையில் புலிகளுக்கு எதிராக நடைபெறும் தாக்குதலில் இந்தியாவின் இராணுவப் பங்கு ஏதுமில்லை என்று அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதர் பெர்னாட் உறுதிபடத் தெரிவித்தார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம், அமைதி நடவடிக்கை மற்றும் சர்வதேச சமூகம் தொடர்பான ஒரு விவாதத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

அரசியல் ரீதியாக இலங்கைக்கு இந்தியாவின் பங்கு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. தனிநாடு கோரிக் கையை விடுதலைப் புலிகள் கைவிடாத வரையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை சாத்தியம் இல்லை. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு விடுதலைப் புலிகள் போன்ற தீவிரவாதத்தில் ஈடுபடும் அமைப்பிடம் நாட்டின் ஒரு பகுதியை எப்படி அளிக்கமுடியும்.

விடுதலைப்புலிகள் விஷயத்தில் அமெரிக்கா எங்களுக்கு எவ்வித நெருக்கு தலையும் அளிக்கவில்லை. இது தொடர்பாக கூறப்படும் புகாரில் உண்மை சிறிதும் இல்லை. விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சு நடத்துமாறு சில நாடுகள் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுக்கின்றன.

புலிகள் போர் நிறுத்தக் காலத்தை தங்களை வலுப்படுத்திக் கொள்ளவும், ஆயதங்களை சேகரித்துக் கொள்ளவும் பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என்பது வரலாறு. அவர்களது முந்தைய நிலையில் தற்போது மாற்றம் ஏதுமில்லை. ஆறு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசு நட வடிக்கை மேற்கொண்டது. பேச்சுவார்த்தைக்கு புலிகள் அவ்வப்போது ஒப்புக்கொள்வது அவர்களது போரிடும் திறனை புதுப்பித்துக் கொள்ளவே என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

புலிகள் தங்களை தயார் செய்து கொண்டவுடன் பேச்சுவார்த்தையை புறக்கணித்து மீண்டும் போருக்கு தயாராகிவிடுகின்றனர். இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பது புலிகளுடன் பேச்சுவார்த்தை என்பதில் மட்டும் முடிந்துவிடாது.

இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்துக்கு புலிகள் மட்டுமே பிரதிநிதிகள் இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழர் தொடர்பான கட்சிகள் நாடாளு மன்றத்தில் பிரதிநிதிகளுடன் உள்ளன என்றார்.

இதேவேளை இலங்கை இனப்பிரச்சினைக்கு அங்குள்ள அனைத்து சமூகத்தினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது என்று இந்தியத் தூதர் அலோக் பிரசாத் தெரிவித்தார். (அ–5)

# இந்திய விசாவுக்குப் புதிய நடைமுறை

(கொழும்பு)

அடுத்த மாதம் முதல் கிழமை தொடக்கம் இந்தியாவுக்கான விசா 'VFS லங்க' நிறுவனத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது.

இந்தியாவுக்கான விசா விண்ணப்பங்களை பரிசீலிக்கும் செயற்பாட்டுக்காக இந்திய உயர் ஸ்தானிகராலயம் VFSலங்காவை ஒழுங்கு செய்துள்ளது.

இதுவரை காலமும் இருந்தது போல் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இல்லாமல் சகல பிரயாணிகளும் VFS லங்காவிலேயே விசாவைப் பெறவேண்டும்.

விசாவிண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்த சேவையை வழங்குவதற்காகவே இம்முயற்சி என ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (அ–5)

# வசதிக்கட்டணம் தவிர்ந்த வேறு கட்டணங்கள் அறவிடப் பாடசாலைகளுக்கு அனுமதி இல்லை

## கல்வி அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களிடம் அறவிடப்படும் வருடாந்த வசதிக்கட்டணத்தைத் தவிர வெறெந்தக் கட்டணத்தையும் அறவிடுவதற்கு சட்ட ரீதியான அனுமதி பாடசாலை நிர்வாகத்திற்கு கிடையாது என கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

பாடசாலை ஆண்டு வசதிக்கட்டணமான 60 ரூபாவை அறவிடுவதற்கு பாடசாலை நிர்வாகத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது என்று அவர் தெரிவித்தார். பிள்ளைகளை பாடசாலையில் சேர்ப்பதற்கு கட்டணம் அறவிடுவதற்கு சட்ட ரீதியான அனுமதி எதுவும் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை என்றும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். எனினும் பாடசாலைகளில் காணப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென ஒரு சில பெற்றோர் நன்கொடை வழங்குவதாகவும் சட்டபூர்வமாக பற்றுச்சீட்டு விநியோகித்தால் மாத்திரமே அதனை ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

இது தவிர பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தீர்மானித்து அதனை அமைச்சிற்கோ அல்லது வலயக்கல்விப் பணிப்பாளருக்கோ அனுப்பி அனுமதி பெற்று பெற்றோரின் இணக்கத்துடனேயே வேறு கட்டணங்கள் அறவிடப்பட முடியும் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ–7)

# யாழ்ப்பாண இளைஞர்கள் உட்பட 4 தமிழர்கள் சென்னையில் கைது

(சென்னை)

சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் பெரம்பலூரில் வீடு எடுத்துத் தங்கியிருந்த 4 இலங்கைத் தமிழர்களைத் தனிப்படைப் பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்தனர்.

அவர்களின் பாஸ்போட் மற்றும் விசாவைப் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றார்கள். சென்னை புறநகர்ப் பகுதியான மடிப்பாக்கத்தில் கடந்த வாரம் விடுதலைப் புலிகளின் உளவு அமைப்பைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் தம்பித்துரை பரமேஸ்வரன் என்பவர் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு உடந்தையாக இருந்ததாக 8 இலங்கைத் தமிழர்கள் கைதானார்கள். இதனையடுத்து சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் புதுமுகங்களின் நடமாட்டம் இருந்தால் அது குறித்துத் தெரிவிக்கும்படி பொலிஸார் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அதனடிப்படையில் பெரம்பலூரில் வீடு எடுத்து தங்கியிருந்த 4 இலங்கைத் தமிழர்கள் குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. புளியந்தோப்புப் பொலிஸ் துணை கமிஷனர் சம்பத் மேற்பார்வையில் பெரம்பலூரில் காமராஜர் வீதியில் வீடு எடுத்துத் தங்கியிருந்த 4 இலங்கைத் தமிழர்களைக் கைது செய்தனர்.

பிடிபட்டவர்கள் சிவரஞ்சன் (வயது-22), ஜெரால்டு விஜயேந்திரன் (வயது-24) ஆகிய இரு வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கிரிலயன் (வயது-25), உமாமகேஸ்வரன் (வயது-25) இவர்கள் இருவரும் திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் மூவர் 10 மாதங்களுக்கு முன்பு சென்னை வந்துள்ளனர். ஆனால் உமாமகேஸ்வரன் ஒரு வாரத்திற்கு முன்பு தான் சென்னை வந்துள்ளார். ஆனால் அவர் எந்தப் பொலிஸ் நிலையத்திலும் தன்னைப் பதிவு செய்து கொள்ளவில்லை எனக் கூறப்படுகின்றது.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்பிருக்கின்றதா? அல்லது விடுதலைப்புலிகளுக்கு அவர்கள் உதவி வருகின்றார்களா? அல்லது இங்குள்ள தலைவர்களின் நடமாட்டங்களை வேவு பார்க்கவந்தவர்களா? என பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டு உள்ளனர். (ச-5)

# ஊடக அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஊடகவியலாளர் லால் ஹேமந்த மாவலஹே தாக்கப்பட்ட சம்பவத்தை ஐந்து ஊடக அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

இது தொடர்பாக விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தற்போதைய விசாரணை நிலைமை தொடர்பாக விளக்கமளிக்கப்படவேண்டும் எனப் பொலிஸ் மா அதிபரைக் கேட்டுக் கொண்டதாக ஐந்து ஊடக அமைப்புக்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

ஜனவரி மாதத்தில் மட்டும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக அமைப்புக்களுக்கு எதிராக 6 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்தி வன்முறைகளற்ற சமூகத்தைக் கட்டிஎழுப்ப நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச-2)

## உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர் தாக்கப்பட்டார்

மட்டக்களப்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட இருந்த வேட்பாளர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் தாக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தாக்கப்பட்டவர் காத்தான்குடி சதாம் ஹுசைன் வீதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஹலிதீன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இவரது வீட்டிற்குச் சென்ற ஆயுததாரிகளே இவரைத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். (ச-5)

## கடத்தப்பட்ட வேட்பாளர் நேற்று விடுதலையானார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடிப் பிரதேசத்தில் வைத்து ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்லடி திருச்செந்தூர் சாண்டோ சங்கரதாஸ் வீதியைச் சேர்ந்த சங்கரதாஸ் சிவானந்ததாஸ் (வயது-54) என்றழைக்கப்படும் வேட்பாளரே இவ்வாறு ஆயுததாரிகளால் கடத்தப்பட்டவர் ஆவார்.

இவர் மட்டக்களப்பு உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சியில் போட்டியிடும் வேட்பாளராவார்.

இவரின் வீட்டிற்கு வெள்ளைவான் ஒன்றில் சென்ற ஆயுததாரிகள் இவரை அழைத்து வானில் கடத்திச் சென்றிருந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-5)

## காணாமல் போனோரின்...

காட்டப்படவில்லை.

ஹெப்பிட்டிக்கொல்லாவவில் துப்பாக்கிச் சூடு மற்றும் வெட்டுக்காயங்களுடன் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சடலங்கள் தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகம் வலுப்பெற்றதையடுத்தே வவுனியா, மன்னார் பகுதிகளில் அண்மைக் காலங்களில் காணாமல் போனோரின் உறவினர்கள் அநுராதபுர வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ளனர்.

மரண பரிசோதனை நிறைவடைந்த சடலங்கள் அடையாளம் காணப்படாதபோதும் வடக்கிலிருந்து அநுராதபுர வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்தோர் காணாமல் போனோரின் உடல்களில் காணப்பட்ட முக்கிய அடையாளங்களை, சடலங்களை மரண பரிசோதனைக்கு உட்படுத்துகின்ற வைத்தியப் பிரிவினரிடம் கையளித்துச் சென்றுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொட பகுதியில் மீட்கப்பட்ட சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் சிதைந்திருப்பதனால் சடலங்கள் டீ.என்.ஏ பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மரண பரிசோதனையை மேற்கொள்ளும் வைத்திய அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். வவுனியா, மன்னார் போன்ற பகுதியில் அண்மையில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் இரண்டு பாதிரியார்களுடனேயே அநுராதபுர வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-2,5)

## வடக்கி...

பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத்திற்குத் தேர்வாகியிருக்கும் ஒரே முஸ்லிம் உறுப்பினர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசியலில் ஒரு நெருக்கடியான நிலை நிலவி வருவதாகக் கூறப்படும் நிலைமையில் இவரது இந்த நியமனம் வந்துள்ளது என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான சூழலில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினரான ரஜீம் முகமது இமாம் பி.பி.ஸிக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப் பட்ட முஸ்லிம்கள் மீண்டும் அவர்களது சொந்த மண்ணில் குடியேற வேண்டும் என்பதுதான் தன்னுடைய விருப்பம் என்றும் அதற்காக பாடுபடுவேன் என்றும் கூறினார். (ச-2,5)

## மணலாறு, மன்கின்டி...

விடுதலைப்புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டனர். இரண்டு தரப்பினர்களுக்குமிடையில் சுமார் இரண்டரை மணி நேரம் கடுமையான சண்டைகள் இடம்பெற்றன என விடுதலைப் புலிகளின் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை வவுனியா பாலமோட்டையில் ஆட்லறி எறிகணைத் தாக்குதல்களுடன் ஊடுருவ முற்பட்ட படையினரின் முயற்சியும் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு வவுனியா பாலமோட்டையில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல் நிலைகள் மீது ஊடுருவித் தாக்குதல் நடத்தும் முயற்சியில் படையினர் ஈடுபட்டனர்.

இதற்கு எதிராக விடுதலைப்புலிகள் தாக்குதல்களை நடத்தினர். இந்த 45 நிமிட நேரம் நீடித்த மோதலில் இழப்புக்களைச் சந்தித்த படையினர் தமது நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.விடுதலைப்புலிகள் தரப்பில் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கருணாவுக்கு...

வழக்கறிஞர் நீதிமன்றில் தெரிவித்தார்.

. கருணாவுக்கு இலங்கை அரசுதான் பாஸ்போட் கொடுத்தது. பிரிட்டன் செல்லும் விமானத்திற்குள் கருணா சென்றபிறகே அவரிடம் பாஸ்போட் தரப்பட்டது என்றும் அவர் கூறினார்.

பிரிட்டன் அரசு வழக்கறிஞர் கூறியது உண்மையல்ல என்று கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார். கருணாவுக்கு நான் உதவி செய்யவில்லை. எது உண்மை என்று சரி பார்க்காமல் பிரிட்டன் நீதிமன்றம் இதுபோன்ற தகவலை வெளியிடுவது தவறு என்றார் அவர். (ச-5)

# இடைக்கால நிர்வாக சபையை அமைக்க...

தேசப்பற்றுள்ள சகல சக்திகளையும் இணைத்து எதிர்த்துப் போராடி இடைக்கால நிர்வாக சபையினைத் தடுத்து நிறுத்துவோம். இன்று ஜனாதிபதி நாட்டின் தலைவர் என்பதை மறந்து சுதந்திரக் கட்சியின் தலைவராகவே செயற்படுகின்றார் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு விஜேயராம மாவத்தையிலுள்ள சத்சிறிபாய மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சோமவன்ச அமரசிங்க இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குறித்து முன் வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபையை ஏற்க முடியாது. இது உண்மையில் சர்வகட்சிக்குழு அல்ல. அரசாங்கக் கட்சிக் குழு. இதில் அங்கம் வகிக்கும் 14 கட்சிகளும் மக்கள் அடித்தளமில்லாத கட்சிகள் ஆகும்.

குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண வெளியிட்டுள்ள தீர்வு யோசனைகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. மக்களின் எதிர்பார்ப்புக்களைத் தேர்தலை நடத்துவதன் மூலமே தீர்த்து வைக்க முடியும். அதைவிடுத்து இனவாத அடிப்படையில் அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபையை ஏற்க முடியாது.

இது எமது நாட்டு மக்களின் தேவைக்காக அல்ல. ஏகாதிபத்தியவாதிகளின் தேவைக்காக அமைக்கப்படவுள்ளது. இதற்கு ஒரு போதும் இடமளியோம். நாட்டின் அனைத்து தேசப்பற்றுள்ள சக்திகளையும் ஒன்றிணைத்து எதிர்த்துப் போராடி இடைக்கால நிர்வாக சபையினைத் தடுத்து நிறுத்துவோம்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தைப் படையினர் அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கின்றனர். மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்குகின்றனர். ஆனால் அரசாங்கம் எவ்விதமான அர்ப்பணிப்புக்களையும் செய்யாது வெறுமனே இனவாதப் போக்கையும் முரண்பாடுகளை ஏற்படுத்தும் யோசனைகளையும் முன் வைக்கின்றது.

### 13-வது திருத்தச் சட்டம்

இந்தியாவின் தேவைக்காக அதன் அடிமைத்தனத்திற்கு தலைசாய்த்து ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு எமது கடல் எல்லைகளில் இந்தியப் பீரங்கிப் படகுகள் பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்டு 140 பேரை பலிகொண்டதன் மூலம் இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இதன்மூலம் இதுவே 13-வது திருத்தச் சட்டத்தை உயிர்ப்பித்தது. இதனால் உருவான மாகாண சபைகளால் எதுவிதமான நன்மைகளும் கிடைக்கவில்லை. வடக்கிற்கென ஏற்படுத்தப்பட்டு இன்று ஏனைய பிரதேசங்களிலும் மாகாண சபைகள் செயற்படுகின்றன.

அன்று சிறிமா தலைமையிலான சுதந்திரக் கட்சி அதனை எதிர்த்து அதனை மீறியும் நிறைவேற்றப்பட்டு புதைகுழியிலுள்ள 13-வது திருத்தச் சட்டத்தை ஜனாதிபதி முன்னெடுக்க முனைவது நாட்டைப் பிரிக்கும் செயற்பாடாகும்.

### ஜனநாயக விரோதச் செயல்

இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் தலைவர் என்பதை மறந்து அரசாங்கத்தினதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவே செயற்படுகின்றார். அத்தோடு 1981 இல் நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறி ஜனநாயக விரோதமாக மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்ட நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட திருத்தத்தை மேற்கொள்ள முனைவது அப்பட்டமான ஜனநாயக விரோத செயற்பாடாகும்.

அமைச்சர் திஸ்ஸ விதாரண ஜே.வி.பியினரை அடிப்படைவாதிகள் எனக் குற்றஞ் சுமத்துகின்றார். நான் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். அன்று சிங்களமொழியை அரசகரும மொழியாக்கியபோது அதற்கு உடந்தையாகவிருந்தவர் அவர்களின் தலைவர் கொல்வின் ஆர்.டி.சில்வாவாகும்.

ஆனால் நாம் இலங்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் மும்மொழிகளையும் அரசகரும மொழியாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம். ஏகாதிபத்தியத்தை அன்று எதிர்த்த சமசமாஜக் கட்சி இன்று அவர்களின் காவலர்களாக மாறியுள்ளது.

ஜனாதிபதி நியமிக்கும் இடைக்கால சபை வட பகுதிக்கான இடைக்கால சபை உறுப்பினர்கள் ஜனாதிபதியாலேயே நியமிக்கப்படவுள்ளனர். இது முற்றிலும் மக்களின் தேவைக்கான சபையாக இருக்காது. தமது அரசியல் ஆதரவாளர்களைத் தாலாட்டும் சபையாகவே அமையும்.

மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற தேர்தலே தேவை. அதனை விடுத்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வது தவறானது. நாட்டிற்கு இது தேவை. ஆனால் சமாதான சூழ்நிலையிலேயே உருவாக்கப்பட வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் தேவையற்றது. அத்தோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக் காலம் முடியும்போது நிறைவேற்று அதிகாரத்தையும் இல்லாதொழிக்க வேண்டும்.

### தேசியப் பிரச்சினையும் ஜே.வி.பியின் தீர்வும்

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு ஜே.வி.பியின் தீர்வுதான் என்ன என பலர் கேட்கின்றனர். எம்மிடம் தெளிவான தீர்வு இருக்கின்றது. முதலில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை முழுமையாக தோல்வியடையச் செய்யவேண்டும்.

அடுத்த கணமே வடக்கு, கிழக்குக்கான அபிவிருத்திகளை துரிதப்படுத்தவேண்டும். இது காலவரையும் மறுக்கப்பட்ட அனைத்து அபிவிருத்திகளையும் ஆரம்பிக்க வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிங்கள , தமிழ் முஸ்லிம் உட்பட அனைத்து இனக் குடும்பங்களுக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும். பிரிவினைவாத கருத்துக்களை முழுமையாக இல்லாதொழித்து இனவாதத்தை வேரோடு அழிக்க வேண்டும். அதன் பின்னர் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவேண்டும்.

இவ்வாறான சமாதான சூழ்நிலை உருவாவதன் பின்பே அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக மக்கள் மத்தியிலான பரந்தளவிலான விவாதத்தை மேற்கொண்டு கருத்துக்கள் கண்டறியப்படவேண்டும்.

முக்கியமான விடயம், வடகிழக்கு உட்பட நாடுமுழுவதும் குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டு அதன் பின்னர் காணி உரிமைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ் நிர்வாகத்தை கிராமம் வரை பரவலாக்க வேண்டும். அதன்போது நிதியையும் வழங்க வேண்டும்.

இன, மத,மொழி, பேதம் மற்றும் சம அந்தஸ்தும், நீதியின் முன் அனைவரும் ஒரே நிலையாக கருதப்படவேண்டும்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் கொலை செய்யப்படவேண்டும் அல்லது எமது நாட்டின் சட்டங்களுக்கு அமைய சிறைவைக்கப்பட வேண்டும். அதைவிடுத்து வெளிநாட்டில் கையளிக்கப்படவேண்டியதோ சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டிய கடப்பாடோ எமக்குக் கிடையாது.

ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் முதலில் ஈராக்கில் மனித உரிமை மீறல்களுக்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷையே சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்றார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் எம்.பிக்களான விஜித ஹேரத், இராமலிங்கம் சந்திரசேகரன்,முஸ்ஸம்மில் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 28.01.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.